சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு
# அருங்காட்சியகங்கள்
# தொல்லியல்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2019–2020

**மானியக் கோரிக்கை எண். 29**

**க. பாண்டியராஜன்**
தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2019

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை**

# கலை மற்றும் பண்பாடு
# அருங்காட்சியகங்கள்
# தொல்லியல்

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2019–2020

## மானியக் கோரிக்கை எண். 29

**க. பாண்டியராஜன்**
தமிழ் ஆட்சிமொழி மற்றும்
தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2019

# அட்டவணை


| **வ. எண்** | **பொருளடக்கம்** | **பக்க எண்** |
|---|---|---|
| 1. | கலை மற்றும் பண்பாடு | 1–86 |
| 2. | அருங்காட்சியகங்கள் | 87–108 |
| 3. | தொல்லியல் | 109–138 |

# கலை பண்பாட்டுத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2019–2020

## முன்னுரை

1. கலையும் பண்பாடும் சமூகத்தின் நயத்தினை வெளிக்கொணர்கிறது. நமது தொன்மையான பாரம்பரியம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்த கலை ஒரு ஒப்பற்ற ஊடகமாகத் திகழ்கிறது. ஓவியங்கள், கட்டடக்கலை, சிற்பங்கள், இசை, நாட்டியம், நாடகம் போன்ற கலைகள் தமிழகத்தின் கலாச்சாரத்தையும், பாரம்பரிய பண்பாட்டினையும் பிரதிபலிக்கின்றன.

இசை, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளை வளர்த்திடவும், பாரம்பரியப் பண்பாட்டை வெளிப்படுத்தும் மரபுக் கலைகளை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லும் பொருட்டும், கலைக்கல்வி நிறுவனங்களையும், கலை அமைப்புகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து ‘‘கலை பண்பாட்டுத் துறை’’ என்ற தனித் துறை 1991ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் உருவாக்கப்பட்டது.

பொதுத்துறையின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வந்த தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்பட்டு வந்த தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மற்றும் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்த அரசு இசைப் பயிற்சி மையங்கள், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்த அரசு கைத்தொழில் கல்லூரிகள் மற்றும் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய அமைப்புகள் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டன.

**துறையின் நோக்கங்கள்**

**1.1** கலைஞர்களையும், கலைக்குழுக்களையும் ஊக்கப்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலை வடிவங்களை போற்றி, பேணி பாதுகாத்தல், கலை விழாக்கள் நடத்துவதன் மூலம் அனைத்து கலைகளையும் மக்களிடையே கொண்டு செல்லுதல் ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு கலை பண்பாட்டுத் துறை செயல்பட்டு வருகிறது. இசைக் கல்வியையும், நுண்கலைக் கல்வியையும், அடுத்த

தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லுதல், பல்வேறு கலைவடிவங்களை ஆவணமாக்குதல் போன்ற பெரும் பணிகளையும் துறை முன்னெடுத்துச் செல்கிறது. கலை வடிவங்களை பாதுகாப்பதுடன் நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் கலைஞர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதையும் துறை மேற்கொண்டு வருகிறது.

**துறையின் செயல்பாடுகள்**

**1.2** தமிழ் இசையையும், கலை பண்பாட்டையும், நமது மாநிலத்தின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சேர்த்தல், தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளை பாதுகாத்து வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணம் கலை நிகழ்ச்சிகள் வழங்கிட வாய்ப்பளித்தல் போன்ற பணிகளை இத்துறை செய்து வருகிறது. இளைய சமுதாயத்தினருக்கு இசை, நாட்டியம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள், ஓவியம், சிற்பம் முதலான கலைகளில், கவின் கலைக் கல்வி நிறுவனங்கள் மற்றும் நிகழ்த்துக் கலைக் கல்வி நிறுவனங்கள் மூலம் இத்துறையால் கலைப்பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழகத்தின் பண்பாட்டுக் கலைகளை வெளிமாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் உள்ளவர்கள்

அறிந்து கொள்ளும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் மற்றும் கலைஞர்களுக்கு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் விருதுகள் வழங்குதல், நலிவுற்ற நிலையில் வாழும் வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கி அவர்களது வாழ்வில் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுத்தல், முக்கிய கலை வடிவங்களை மீட்டுருவாக்குதல் போன்ற கலைப் பணிகளை செயல்படுத்துவதில் கலை பண்பாட்டுத் துறை அயராது பணியாற்றுகிறது.

கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மண்டல அளவில் கலை சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்க, ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் இயங்கி வருகின்றன. இளைய தலைமுறையினருக்கு இசைக் கல்வியை வழங்க தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம், நான்கு அரசு இசைக் கல்லூரிகள், பதினேழு மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகியவை செயல்பட்டு வருகின்றன. ஓவியர்கள், சிற்பிகள் மற்றும் கலைஞர்களை உருவாக்கிடும் பொருட்டு, இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் ஒரு அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்

கலைக் கல்லூரி வாயிலாக மாணாக்கர்களுக்கு நுண்கலைக் கல்வி மற்றும் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்டவற்றுடன் கூடுதலாக, இளம் சிறார்களிடையே கலை ஆர்வத்தை தூண்டுவதற்கு 40 சவகர் சிறுவர் மன்ற மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் கலை விருதுகள் வழங்குதல் மற்றும் கலை சார்ந்த நிகழ்ச்சிப் பணிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்திடவும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு “மாவட்டக் கலை மன்றம்” உள்ளது. ஓவியர்களையும், சிற்பிகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் கலைக்காட்சிகளை கலை பண்பாட்டுத் துறை நடத்தி வருகிறது. தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கும் கலைஞர்களை ஊக்கப்படுத்திடவும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்திடவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதன் மூலம் நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருகிறது.

அரசின் பல்வேறு கலைப்பணித் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்திடும் பொருட்டும், அத்திட்டப் பணிகளை செயல்படுத்திடவும், கலை பண்பாட்டுத் துறை ஆணையருக்கு உதவியாக, ஒரு இணை இயக்குநர், ஏழு மண்டல உதவி இயக்குநர்கள், ஒரு கணக்கு அலுவலர் நுண்கலைக் கல்லூரிகள் மற்றும் இசைக் கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் இதர அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்**

**1.3** மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கிடவும், தமிழ்நாட்டின் பாரம்பரிய பண்பாட்டு மரபுகளை முன்னிலைப்படுத்திடவும் மற்றும் அனைத்து பண்பாட்டு பாரம்பரியங்களுக்கு புத்துணர்வு அளித்திடவும் மாவட்டக் கலை மன்றங்கள் மற்றும் இதர கலை அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம், தஞ்சாவூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஏழு இடங்களில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

செயல்பட்டு வருகின்றன. உதவி இயக்குநர்கள் தலைமையில் செயல்பட்டு வரும் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக மாவட்டங்களில் அனைத்துவித கலை விழாக்கள், கலைப்போட்டிகள், கலைப்பயிற்சிகள் ஆகியன நடத்தப்படுகின்றன. மேலும், சிறந்த கலைஞர்களுக்கு மாவட்ட அளவிலான விருதுகளும் வழங்கப்படுகின்றன. மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், சவகர் சிறுவர் மன்றங்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் ஆகியவற்றின் நிர்வாகம் மற்றும் திட்டப்பணிகளை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மேற்கொண்டு வருகின்றன.

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படும் முக்கிய விழாக்களான வைகுண்ட ஏகாதசி விழா (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) கார்த்திகை ஒளி விழா (திருவண்ணாமலை மாவட்டம்), பாவை விழா (விருதுநகர் மாவட்டம்) சாரல் விழா (திருநெல்வேலி மாவட்டம்), சீர்காழி மூவர் விழா (நாகப்பட்டினம் மாவட்டம்), அருவித்திருவிழா, குமரித் திருவிழா (கன்னியாகுமரி மாவட்டம்), இராஜராஜசோழன் சதய விழா (தஞ்சாவூர் மாவட்டம்), ஆழித்தேர் விழா

(திருவாரூர் மாவட்டம்), தமிழிசை விழா, ஆடிப்பெருக்கு விழா (தர்மபுரி மாவட்டம்), மாங்கனி விழா (கிருஷ்ணகிரி மாவட்டம்), திருத்தணி ஆடிக்கிருத்திகை விழா (திருவள்ளூர் மாவட்டம்), மகாசிவராத்திரி விழா (காஞ்சிபுரம் மாவட்டம்), வல்வில் ஓரி விழா (நாமக்கல் மாவட்டம்), தீரன் சின்னமலை விழா (ஈரோடு மாவட்டம்), மகாகவி பாரதியார் பிறந்த தின விழா, வ.உ.சிதம்பரனார் பிறந்த தினவிழா (தூத்துக்குடி மாவட்டம்), ஆடிப்பெருந்திருவிழா (திருப்பூர் மாவட்டம்) கோடை விழா (வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், சேலம் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், நீலகிரி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம்) மற்றும் மதநல்லிணக்க விழா ஆகிய விழாக்களில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், மாவட்டங்களில் தனித்தும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையம், சுற்றுலாத் துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் தனியார் கலை அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்தும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

அயல்நாடுகளில் கலைப்பரிமாற்றத் திட்டத்தின் கீழ், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக சிங்கப்பூர்,

மலேசியா, தாய்லாந்து மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் தமிழகத்தின் பராம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**மாவட்டக் கலை மன்றங்கள்**

**1.4** மாவட்டங்களில் உள்ள கலைஞர்களை அடையாளம் கண்டு உதவவும், தொன்மையான தமிழ் கலைகளை பேணிப்பாதுகாத்து மேம்படுத்திடவும், கலைத் திறமையுள்ள கலைஞர்களை கண்டறிந்து மாவட்ட அளவில் விருதுகள் வழங்கிடவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கலைத் துறையில் சிறந்து விளங்கும் **5** கலைஞர்களுக்கு அவர்களின் வயது மற்றும் திறமையின் அடிப்படையில் கலை விருதுகள் வழங்கும் திட்டம் **2002–2003**ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. **2017–2018**ஆம் ஆண்டு முதல் கலை விருதுகளுக்கு

தேர்வு செய்யப்படும் கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுத் தொகையானது பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:—

| வ. எண் | வயது பிரிவு | விருது | விருதுத் தொகை |
|---|---|---|---|
| 1 | 18 அகவை மற்றும் அதற்குட்பட்ட அகவைப் பிரிவினர் | கலை இளமணி | ரூ.4,000/— |
| 2 | 19 முதல் 35 வரை உள்ள அகவைப் பிரிவினர் | கலை வளர்மணி | ரூ.6,000/— |
| 3 | 36 முதல் 50 வரை உள்ள அகவைப் பிரிவினர் | கலை சுடர்மணி | ரூ.10,000/— |
| 4 | 51 முதல் 60 வரை உள்ள அகவைப் பிரிவினர் | கலை நன்மணி | ரூ.15,000/— |
| 5 | 61 அகவை மற்றும் அதற்கு மேற்பட்ட அகவைப் பிரிவினர் | கலை முதுமணி | ரூ.20,000/— |

இத்திட்டம் தொடங்கப் பெற்ற 2002—2003—ஆம் ஆண்டு முதல் இதுவரை 2,310 மாவட்டக் கலை விருதுகள் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக 2002—2003ஆம் ஆண்டு முதல் கலைஞர்களுக்கு ‘‘அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம்’’ இத்துறையால்

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளில் முன்னுரிமை பெறுதல், நிதி உதவி பெறுதல் மற்றும் பயணச் சலுகை பெறுதல் ஆகியவற்றிற்கு இவ்வடையாள அட்டைகள் கலைஞர்களுக்கு பயனுடையதாக இருக்கின்றன.

**தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்**

**1.5** தமிழ்நாட்டிலுள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூகப் பாதுகாப்பிற்காகவும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நோக்கத்திற்காகவும், அரசால் அடையாளம் காணப்பட்ட பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகளின் பல்வேறு கலை வடிவங்கள் அழியாமல் பாதுகாக்கவும், இளைய தலைமுறையினருக்கு நாட்டுப்புறக் கலைகளில் பயிற்சிகள் அளித்திடவும், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் **31.03.2019** வரை **33,575** கலைஞர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். **7,603** கலைஞர்களுக்கு ரூ.**134.95** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**கலைக்கல்வி நிறுவனங்கள்**

**இசைக்கல்வி பயிலகங்கள்**

1.6 சங்க இலக்கியமான தொல்காப்பியத்தில் ஐவகை நிலப் பாகுபாடும் (திணை), அதற்குரிய இசை வகைகள் பற்றியும் எடுத்து கூறப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் இசைக் கருவிகள் குறித்த எண்ணற்ற குறிப்புகள் உள்ளன.

"பண்ணென்னாம் பாடற் கியைபென்றேல் கண்ணென்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்" (குறட்பா– 573)

பாடலோடு இசையின் பொருந்துதல் இல்லையானால் என்ன பயனுடையதாகும். அதுபோல், கண்ணோட்டம் இல்லாவிட்டால் கண் என்ன பயனுடையதாகும் என்கிறார் அய்யன் திருவள்ளுவர்.

"பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்" என்கிறது மாணிக்கவாசகரின் திருவாசக வரிகள்.

தொன்மையான தமிழ் பண்பாட்டினை வெளிப்படுத்துவதில் "தமிழிசை" முன்னோடியாக உள்ளது.

தொன்மை தமிழ்க்கலைகளான இசையும், நாட்டியமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. இசையும் நாட்டியமும் நமது மனதிற்கு அமைதி தருவதாகும்.

கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் இசைக் கல்வி நிறுவனங்கள் இளைய தலைமுறையினருக்கு இசையினை கற்பிக்கவும், இசையின் முக்கியத்துவத்தை பரப்பும் விதத்திலும் முக்கியப் பங்காற்றி வருகின்றன. தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம், அரசு இசைக் கல்லூரிகள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் ஆகியன மாநிலத்திலுள்ள இளைஞர்களுக்கு இசை, கலைகள் மற்றும் தமிழ் இசை போன்ற பல்வேறு பாடப் பிரிவுகளை கற்பிப்பதன் மூலம் மாணாக்கர்களை சிறந்த இசைக் கலைஞர்களாக உருவாக்கும் பணிகளை செய்து வருகின்றன.

**தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம்**

**1.7** நமது தொன்மையான இசை மற்றும் கவின் கலைக் கல்வியின் சிறப்புகளை மாநில, தேசிய மற்றும் உலகளவில் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலும், அவர்களுக்கு இசை, நாட்டுப்புறக் கலைகள், கட்டடக்கலை, சிற்பக்கலை

போன்றவற்றின் மகத்துவத்தை உணர்த்த வேண்டும் என்பதன் அடிப்படையிலும், மாண்புமிகு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவையில் விதி 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி ‘‘தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம்’’ தோற்றுவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 14.11.2013 அன்று ‘‘தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டம் 2013’’ இயற்றப்பட்டது. இப்பல்கலைக்கழகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேந்தராகக் கொண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம் சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக் கழகத்தின் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள, பதிவாளர், நிதி அலுவலர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2014–2015ஆம் கல்வியாண்டு முதல் குரலிசை, வீணை, வயலின், நாதசுரம், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகிய கலைப்பிரிவுகளில் முதுகலை பட்டப்படிப்புகள் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டு

வருகின்றன. 2015–2016ஆம் கல்வியாண்டு முதல், முனைவர் பட்ட ஆய்வு (Ph.D) பாடத்திட்டம் மற்றும் 2016–2017ஆம் கல்வியாண்டு முதல் கூடுதலாக ஓவியம் மற்றும் காட்சிவழித்தகவல் தொடர்பு மற்றும் வடிவமைப்புத் துறையில் வார இறுதி நாட்கள் பயிற்சியாக மூன்றாண்டு முதுகலை பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும், இப்பல்கலைக்கழகத்தில், 2018–2019ஆம் கல்வியாண்டு முதல் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பாடத்திட்டமும் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு அரசு இசைக்கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணத்தில் செயல்படும் இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள், மாமல்லபுரத்தில் செயல்படும் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி மற்றும் திருச்சிராப்பள்ளியில் செயல்படும் அரசு நிதியுதவி பெறும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகிய 8 கல்லூரிகளும் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. மேலும், தமிழிசைக் கல்லூரி, இராஜா அண்ணாமலை மன்றம்,

சென்னை மற்றும் சத்குரு சங்கீத வித்யாலயம், மதுரை ஆகிய இரண்டு கல்லூரிகளும் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக (திருத்த) சட்டம், 2016 ன்படி, இப்பல்கலைக் கழகத்தின் கல்விக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன.

இப்பல்கலைக்கழகம் சிறப்புடன் செயல்படுவதற்கு ஆட்சிமன்றக் குழு (சிண்டிகேட்), பாடத்திட்டக்குழு, கல்விக்குழு, நிதிக்குழு ஆகியவை அமைக்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்பட்டு கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2018–2019ஆம் நிதியாண்டில் வரவு–செலவு திட்டத்தில் ரூ.2.03 கோடி தொகை அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டிற்காக ரூ.1.00 கோடி நல்கையாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**அரசு இசைக் கல்லூரி, சென்னை**

**1.8** சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியானது “பிராடி கேசில்”(Brodie Castle) என்னும் பாரம்பரியக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. சென்னை, அரசு இசைக் கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சீரா, முகர்சிங், நாதசுரம், தவில், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகளும், நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப்படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப்படிப்பும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. மேலும், **2014-2015**ஆம் கல்வியாண்டு முதல், குரலிசை, வயலின், வீணை ஆகிய மூன்று பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பும், மாலை நேரங்களிலும், வார இறுதி நாட்களிலும் இல்லத்தரசிகளுக்காகவும், கூடுதல் தகுதி பெற விரும்பும் மாணாக்கர்களுக்காகவும் குரலிசை, வீணை ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

**அரசு இசைக் கல்லூரி, மதுரை**

**1.9** மதுரை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, எழில் கொஞ்சும் "பசுமலையில்" அமைந்துள்ளது. இக்கல்லூரியில், குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகளும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. **2014–2015**ஆம் கல்வியாண்டு முதல் குரலிசை பாடப்பிரிவில் மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

**அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்**

**1.10** கோயம்புத்தூர், மலுமிச்சம்பட்டியில் அரசு இசைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப்படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. **2014–2015**ஆம் கல்வியாண்டு முதல் குரலிசை, வயலின், வீணை ஆகிய மூன்று பாடப்பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

**அரசு இசைக் கல்லூரி, திருவையாறு**

**1.11** கர்நாடக இசைக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஆண்டுதோறும் ‘‘சத்குரு ஸ்ரீதியாகராஜர் ஆராதனை’’ நடைபெறும் திருவையாறில், அரசு இசைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகளும், குரலிசை மற்றும் வீணை ஆகியவற்றில் மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பும், இரண்டாண்டு முதுகலை பட்ட மேற்படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப்படிப்பும், இசையில் முனைவர் பட்டம் பெறும் வகையில் ஆராய்ச்சிப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு அரசு இசைக்கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அரசால் மாதந்தோறும் ரூ.500/–வீதம் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பத்து மாதங்களுக்கு ‘‘படிப்புதவித் தொகை’’ வழங்கப்பட்டு வருகிறது.

**மாலை நேர இசைக்கல்லூரி மையங்கள்**

**1.12** சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று இடங்களில் “மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள்” செயல்பட்டு வருகின்றன. சென்னை அரசு இசைக்கல்லூரி வளாக மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் ஆகியவற்றிலும், மதுரை மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகியவற்றிலும், கோயம்புத்தூர் மையத்தில் குரலிசை, வீணை, வயலின் ஆகிய பிரிவுகளிலும் ஈராண்டு சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படுகின்றன.

**மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்**

**1.13** தமிழிசையினை தமிழகமெங்கும் பரவலாக்கும் பொருட்டும், இசையில் விருப்பமுள்ள இளைய சமுதாயத்தினரை ஊக்குவிக்கவும், இசைக்கல்வியினை அவர்களிடையே பிரபலப்படுத்திடும் நோக்கத்துடனும், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம்

ஆகிய 17 இடங்களில் மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டன. மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம், வயலின், மிருதங்கம் ஆகிய ஏழு கலைகளில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்தும் விதமாக, அரசால் மாதந்தோறும் ரூ.400/–வீதம் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பத்து மாதங்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு ரூ.85.00 இலட்சம் செலவில் புதிதாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகச்சிறந்த வல்லுநர்களைக் கொண்டு இசைத்திறன் மேம்பாட்டு புத்தாக்கப் பயிற்சிகள் 26.04.2019 மற்றும் 27.04.2019 ஆகிய நாட்களில் சேலத்தில் நடைபெற்றது.

**கவின் கலை மற்றும் கட்டடக் கலைக் கல்வி நிறுவனங்கள்**

**1.14** நமது தொன்மையான ஓவியங்களும், சிற்பங்களும் பண்டைய கலாச்சாரத்தின் பெருமைகளை இளைய தலைமுறையினருக்கு எடுத்துரைப்பதாக உள்ளன. தமிழகத்தின் கலாச்சாரத்தின் ஊற்றாகவும், கலை அழகை ரசனையோடு வெளிப்படுத்தும் கலைப் பெட்டகமாகவும் ஓவியங்கள் விளங்குகின்றன. கலையானது, நமது உள்மனது எண்ணங்கள் மற்றும் ஆத்மா ஆகியவற்றை பிரதிபலிப்பதுடன், மனித இயல்புகளின் சிக்கல்களையும், மனித வாழ்வின் நுணுக்கங்களையும் மக்களுக்கு எடுத்துரைப்பதாக அமைகிறது. நிஜவாழ்க்கை சூழல்கள் கலை வடிவங்களாக மாறும்போது கலை மேலும் புத்துயிர் பெறுகின்றது. அரசு கவின் கலைக் கல்லூரிகளும், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியும் புகழ்பெற்ற ஓவியர்களையும், தலைசிறந்த சிற்பிகளையும் உருவாக்கியுள்ளதுடன், தங்கள் துறையில் அவர்கள் குறிப்பிடத்தக்க வகையில் வரலாறு படைத்தவர்களாகவும் திகழச் செய்துள்ளன.

**அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை**

**1.15** இந்தியாவிலேயே பழமையான கல்லூரிகளில் ஒன்றான "சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி", ஆங்கிலேயர்கள் காலத்தில் ஓவியப் பள்ளியாக தொடங்கப்பட்டு, பின்னர் அரசு கலைத்தொழில் கல்லூரியாக (Art and Crafts) தரம் உயர்த்தப்பட்டு, தற்பொழுது அரசு கவின் கலைக் கல்லூரியாக (Fine Arts) மேம்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு மற்றும் வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய ஆறு பாடப்பிரிவுகளில் நான்காண்டுகால இளங்கவின்கலை பட்டப்படிப்பும், பதிப்போவியத்துறை நீங்கலாக, பிற ஐந்து பாடப்பிரிவுகளில் இரண்டாண்டு முதுகவின்கலை பட்டமேற்படிப்புகளும் பயிற்றுவிக்கப் படுகின்றன.

**அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்**

**1.16** கோயில் நகரமான கும்பகோணத்தில் அரசு கவின் கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் காட்சிவழித்தகவல் தொடர்பு மற்றும் வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் நான்காண்டுகால இளங்கவின்கலை பட்டப்படிப்புகளும், இரண்டாண்டு முதுகவின்கலை பட்டமேற்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம்**

**1.17** பல்லவர் காலத்துச் சிற்பங்களை பறைசாற்றும் சிற்பநகரமான மாமல்லபுரத்தில் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. மாமல்லபுரம் சிற்ப நகரமாகத் திகழ்வதுடன், இந்திய சிற்பக் கட்டடக் கலையின் பல்வேறு வடிவங்களை பறைசாற்றுவதாகவும் சிற்ப வரலாற்றில் முக்கிய இடத்தினை வகிக்கிறது.

மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில், மரபு கட்டடக் கலையில் பி.டெக். (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக்கலையில் பி.எப்.ஏ.(B.F.A in Traditional Sculpture) மற்றும் மரபு ஓவியம் மற்றும் வண்ணக்கலையில் பி.எப்.ஏ. (B.F.A in Traditional Drawing and Painting) ஆகிய நான்காண்டு இளங்கலை பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

**கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

**1.18** கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி திருச்சிராப்பள்ளியில் அரசு நிதியுதவி பெறும் கல்லூரியாக செயல்பட்டு வருகிறது. பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பாடப்பிரிவுகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப்படிப்புகளும், மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்புகளும், இரண்டாண்டு முதுகலை பட்டப்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. மேலும், ஆய்வாளர்களுக்கு ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வும், முனைவர் பட்ட ஆய்வும் இக்கல்லூரியில் மேற்கொள்ளப் படுகின்றன. கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இக்கல்லூரிக்கு கல்லூரிக் கல்வி

இயக்ககத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. 2017–2018ஆம் நிதியாண்டிலிருந்து இக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்தும் விதமாக, அரசால் மாதந்தோறும் ரூ.500/– வீதம் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பத்து மாதங்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**யுனெஸ்கோ அங்கீகாரம்**

**1.19** படைப்பாக்கம் மற்றும் இசைக்கான பங்களிப்பு ஆகியவற்றிற்கான சிறப்புப் பட்டியலில் தற்போது உலகளவில் தேர்வு செய்யப்பட்ட 64 நகரங்களில், சென்னை நகரையும் சேர்த்து “யுனெஸ்கோ” அமைப்பு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவ்வரிசையில் உலகம் முழுவதும் மொத்தம் 180 நகரங்கள் உள்ளன. சென்னை படைப்பாக்க இசை நகரமாக அங்கீகாரம் பெற்றதை கொண்டாடும் விதமாக “சென்னையில் இசை விழா” நடத்திட ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு “சென்னையில் இசை விழா” அரசு அருங்காட்சியகக் கலையரங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

**1.20** இந்திய அரசின் சங்கீத நாடக அகாதமியின் நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காகவும், தமிழகத்தின் தொன்மைக் கலைகளைப் போற்றி, பேணிப் பாதுகாத்து வளர்க்கவும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பானது, **1955**ஆம் ஆண்டு தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் அங்கீகரிக்கும் வகையில் **1973**ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசு வழங்கும் நல்கையின் வாயிலாக கலைஞர்கள் பயனடையும் வண்ணம் பல்வேறு கலைப்பணித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைப்பணிகள்

**1.21** நலிந்த நிலையில் வாழும் வயோதிகக் கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்குதல், திறமைமிக்க புத்திளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக

அவர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பு அளித்தல் ஆகிய கலைப்பணிகள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் முக்கியப் பணிகள் ஆகும். மேலும், கலைஞர்கள் பயன்பெறும் நோக்கில் பல்வேறு கலைவிழாக்கள் நடத்துதல், அயல்நாடுகளில் தமிழ் கலைகளைப் பரப்புதல், தொன்மைச் சிறப்புமிக்க அரிய கலை வடிவங்களை ஆவணமாக்குதல் ஆகிய கலைப்பணித் திட்டங்களையும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மேற்கொண்டு வருகிறது.

கலைத்துறையில் மதிப்புமிகு சேவை புரிந்த கலைஞர்களுக்கு மாநில அளவில் ‘கலைமாமணி’ விருதுகள் மற்றும் இயல், இசை, நடனக் கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்காக சேவையாற்றியவர்களுக்கு "பாரதி", "எம்.எஸ்.சுப்புலட்சுமி", "பாலசரசுவதி" ஆகியோர் பெயர்களில் அகில இந்திய அளவிலான மூன்று விருதுகள், தலா ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் மன்றத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் பண்பாட்டினை சித்தரிக்கும் சிறந்த தமிழ் நாடகம் தயாரித்து மேடையேற்றம் செய்திட தொழில்முறை நாடகக் குழுக்களுக்கும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கும் நிதியுதவி வழங்குகிறது. அரிய கலை நூல்களை வெளியிட நல்கை

வழங்குதல், கலைமேதைகளை போற்றும் விதமாக விழாக்களை நடத்தும் தன்னார்வக் கலை அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல் ஆகிய கலைப் பணிகளையும் மன்றம் மேற்கொண்டு வருகிறது.

**கலைமாமணி மற்றும் பிற விருதுகள் வழங்குதல்**

**1.22** கலைத்துறையில் மதிப்புமிகு சேவைபுரிந்து பல்வேறு கலைகளில் தங்களது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் கலைஞர்களை பாராட்டும் விதமாக ‘‘கலைமாமணி’’ விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், இதுவரை **1,594** கலைஞர்களுக்கு ‘‘கலைமாமணி விருதுகள்’’ வழங்கி சிறப்பித்துள்ளது. கலைமாமணி விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று சவரன் தங்கமும், பொன்னாடையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

அரசாணை (நிலை) எண் **31**, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் **28.02.2019**–ன் வாயிலாக, **201** கலைஞர்களுக்கு ‘‘கலைமாமணி’’ விருதுகளும், அகில இந்திய அளவில் இயல், இசை, நாட்டியம் ஆகிய பிரிவுகளில்

சிறந்து விளங்கும் 9 கலைஞர்களுக்கு ‘‘பாரதி விருது’’, ‘‘எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது’’ மற்றும் ‘‘பாலசரசுவதி விருது’’ வழங்கிட அறிவிக்கப்பட்டு விரைவில் விருதுகள் வழங்கப்படவுள்ளன. மேலும் 3 சிறந்த கலை நிறுவனங்களுக்கு கேடயமும், சிறந்த நாடகக் குழுவிற்கு ஒரு சுழற்கேடயமும் வழங்கிட அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 32, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 04.03.2019–ன் வாயிலாக, கலைமாமணி விருது பெற்றவர்களில், வறிய நிலையில் வாழும் 8 மூத்த கலைஞர்களுக்கு தலா ரூ.25,000/– மதிப்பிலான பொற்கிழியும் வழங்கிட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

**1.23** நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு õ‰î ªî£¬è, 01.04.2018 முதல் மாதந்தோறும் ரூ.2,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 58 வயது நிறைவடைந்து, நிதியுதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000/–க்குள் உள்ள கலைஞர்கள்

இத்திட்டத்தில் நிதியுதவி பெறத் தகுதியுடையவர்கள். இதுவரை, இத்திட்டத்தின் கீழ் மொத்தம் **14,063** நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப பராமரிப்பு நல்கை வழங்குதல்.**

**1.24** தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு, குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. **2014–2015**ஆம் ஆண்டிலிருந்து ஒருமுறை மட்டும் வழங்கப்படும் குடும்ப பராமரிப்புத் தொகை ரூ.**10,000/–**ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை மொத்தம் **448** மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு ரூ.**21.60** இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. **2018–2019**ஆம் ஆண்டில், **18** கலைஞர்களின் குடும்பங்கள் இந்நிதியுதவியைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றத் திட்டம்**

**1.25** தமிழ் பண்பாட்டு மரபினை பல்வேறு மாநில மக்களும் அறிந்து கொள்ள வாய்ப்பினை உருவாக்கும்

வகையிலும், தேசிய ஒருமைப்பாட்டுணர்வை மேம்படுத்தும் வகையிலும், மாநிலங்களுக்கிடையே கலைப்பரிமாற்றத் திட்டத்தை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தினைச் சார்ந்த **63** கலைக்குழுக்கள் வெளி மாநிலங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர். அதேபோன்று, **3** வெளிமாநிலக் கலைக்குழுக்கள் தமிழகத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர். இத்திட்டத்தின் வாயிலாக தமிழகத்தினைச் சார்ந்த **1,184** கலைஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**அயல்நாடுகளில் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல்**

**1.26** தமிழர்கள் உலகம் முழுவதும் பரவி உள்ளனர் என்பதாலும், நமது தமிழ் பண்பாட்டினையும், கலை அனுபவங்களையும் தொடர்ந்து உணர்ந்து கொள்ளும் வகையிலும், நமது சிறப்புமிக்க பண்பாட்டினை வெளிநாட்டினர் கண்ணுறும் வகையிலும், நமது பண்பாட்டின் தொன்மையினை உலகிற்கு வெளிக்காட்டும் வகையிலும் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் அயல்நாடுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. நமது மரபு சார்ந்த கலைகளான பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு

இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, ஓமன், மலேசியா, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்**

1.27 தமிழகத்தின் பண்பாடு மற்றும் கலை வடிவங்களை போற்றி வளர்க்கும் தன்னார்வக் கலை அமைப்புகள் வாயிலாக, குரலிசை, கருவியிசை மற்றும் பரதநாட்டியம் ஆகிய கலைகளில் திறமைமிக்க இளம் கலைஞர்களுக்கு ஊக்கமளித்து மேடையேற்றம் செய்திட வாய்ப்புகள் வழங்கும் வகையில், கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.5,000/– முதல் ரூ.10,000/– வரை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை, 1,972 இளங்கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

அதிக அளவில் இளங்கலைஞர்கள் பயன்பெறும் பொருட்டு, இத்திட்டத்திற்கு, இதுவரை ரூ.1.00 இலட்சம் என்று ஒப்பளிப்பு செய்யப்பட்டு வந்த தொகை, 2017–2018–ஆம் நிதியாண்டிலிருந்து, ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு, கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்**

**1.28** தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக்குழுக்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. தனி நபருக்கு ரூ.2,000/–மும், கலைக் குழுக்களுக்கு ரூ.6,000/–மும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**புதிய நாடகங்கள், நாட்டிய–நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்**

**1.29** நாடகக் கலையையும், அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ் பண்பாட்டினையும், தமிழ் இலக்கியத்தையும், தமிழர்களின் வீரத்தினையும் வெளிப்படுத்தும் விதமாக புதிய வரலாறு, புராண, சமூக நாடகங்கள் தயாரித்து, மேடையேற்றம் செய்திடவும், இயல் இசை நாடக மன்றம் நிதியுதவி வழங்குகிறது. தமிழ் கலைகள், இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டை மையக் கருத்தாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாட்டிய–நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட கலைக்குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை, 47 நாடகங்களும், 35 நாட்டிய–நாடகங்களும் தயாரித்து மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**அரிய கலை நூல்கள் பதிப்பிப்பதற்கு மானியம் வழங்குதல்**

**1.30** அரிய கலைகள் குறித்த நூல்களை பதிப்பித்து, வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 109 புத்தகங்கள் பதிப்பித்திட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. ஒரு நூலுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம், இவ்வாண்டில் 5 அரிய கலை நூல்களை பதிப்பித்து வெளியிட தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கலைஞர்களுக்கு பயணக் கட்டணச் சலுகை**

**1.31** நாடகக் கலைஞர்கள் மற்றும் கலைக்குழுக்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்திட தொடர் வண்டி, அரசுப் பேருந்துகளில் வெளியூர்களுக்கு சென்று வருவதற்காக பயணக் கட்டணச் சலுகை வழங்க மன்றத்தால் பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது. 2018–2019ஆம் ஆண்டில், தொடர்வண்டியில் பயணக்கட்டணச் சலுகையில் 4,101 கலைஞர்கள் அடங்கிய 401 கலைக் குழுக்களும்,

பேருந்து பயணச் சலுகையில் 79 கலைஞர்கள் அடங்கிய 7 கலைக் குழுக்களும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

**ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கான நலத் திட்டங்கள்**

**1.32** ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகள் தமிழ் பண்பாட்டினை பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது. இக்கலைகள் நாகரிகத்தின் சிறப்புகளையும், வளர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றன. ்வை பாதுகாக்கப்படும்பொழுது, அடுத்த தலைமுறையினருக்கு பண்பாட்டு,, சின்னங்களாக விளங்குகின்றன. இக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை கண்டறிந்து, ஊக்குவித்து அவர்களது திறமைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் இத்துறை செயல்பட்டு வருகின்றது.

**கலைச்செம்மல் விருது வழங்கும் திட்டம்**

**1.33** மரபுவழி, நவீனபாணி கலைப்பிரிவுகளில் சாதனைகள் புரிந்து சிறந்து விளங்கும் ஓவிய, சிற்பக் கலைஞர்களைப் பாராட்டும் வகையில் ‘‘கலைச்செம்மல் விருதுகள்’’ தமிழக அரசால் வழங்கப்படுகின்றன. கலைச்செம்மல் விருதுபெறும் கலைஞர்களுக்கு

செப்புப்பட்டயம் மற்றும் விருதுத் தொகையாக ரூ.50,000/– வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை மரபுவழிS் பிரிவில் 16 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணி பிரிவில் 47 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. 2018–2019 ஆம் ஆண்டில் 5 மரபுவழிக் கலைஞர்களுக்கும், 5 நவீனபாணிக் கலைஞர்களுக்கும் "கலைச்செம்மல் விருதுகள்" வழங்க அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டு இக்கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்படவுள்ளது.

**மாநில அளவில் மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில் ஓவிய–சிற்பக் கலைக்காட்சி நடத்துதல் மற்றும் விருதுகள் வழங்கும் திட்டம்**

**1.34** ஓவிய, சிற்பக் கலைகளை ஊக்கப்படுத்தவும், அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் திறமைகளை மேம்படுத்தவும், மாநில அளவில் மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில், "ஓவிய–சிற்பக் கலைக்காட்சி" நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள கலைஞர்களிடமிருந்து ஓவிய, சிற்ப, கலைப்படைப்புகள் பெறப்பட்டு, அவற்றிலிருந்து அரசால் அமைக்கப்படும் தெரிவுக் குழுவால் கலைப்படைப்புகள் தெரிவு செய்யப்படுகின்றன. சிறந்த மரபுவழி, நவீனபாணி ஓவிய மற்றும் சிற்ப, கலைப்படைப்புகள்

கலைக்காட்சியாக காட்சிப்படுத்தப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. முதுநிலைப் பிரிவில் (30 வயதுக்கு மேற்பட்ட) 30 மூத்தகலைஞர்களுக்கு தலா ரூ.15,000/– வீதமும், இளநிலைப் பிரிவில் (30 வயதுக்குட்பட்ட) 30 இளங்கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/– வீதமும், என 60 கலைஞர்களுக்கு, ரூ.7.50 இலட்சத்திற்கு பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

**தனிநபர் கலைக்காட்சி (One man Show) மற்றும் கூட்டுக் கலைக்காட்சி (Group Show) நடத்திட கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்**

1.35 2018–2019ஆம் ஆண்டிலிருந்து தனிநபர் கலைக்காட்சிக்கு வழங்கப்படும் உதவித் தொகையினை ரூ.7,500/–லிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தி 10 கலைஞர்களுக்கு வழங்கிடவும், கூட்டுக் கலைக்காட்சிக்கு வழங்கப்படும் தொகையினை ஒரு குழுவிற்கு ரூ.15,000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தி 5 குழுக்களுக்கு வழங்கிடவும் ஆக மொத்தம் ரூ.5.00 இலட்சம் தொகைக்கு ஒப்பளிப்பு செய்து அரசால் ஆணையிடப்பட்டு திட்டம் 2018–2019ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் மொத்தம்

38 கலைஞர்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர். ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், அவர்கள் தங்களது கலைப்படைப்புகளை காட்சிப்படுத்திடவும் இத்திட்டம் வழி வகுக்கும்.

**கவின்கலை பயிலும் மாணாக்கர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்**

1.36 சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் ஒவ்வொரு ஆண்டும், இறுதியாண்டு இளங்கவின் கலை பயிலும் 10 சிறந்த மாணாக்கர்களுக்கு தலா ரூ.3,000/– வீதமும், இறுதியாண்டு முதுகவின் கலை பயிலும் 4 சிறந்த மாணாக்கர்களுக்கு தலா ரூ.5,000/–வீதமும் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல், கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கவின்கலை பயிலும் 10 சிறந்த மாணாக்கர்களுக்கு ரூ.3,000/–வீதமும், இறுதியாண்டு முதுகவின்கலை பயிலும் 2 சிறந்த மாணாக்கர்களுக்கு ரூ.5,000/–வீதமும் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டுதோறும் 26 சிறந்த மாணாக்கர்கள் பயனடைகின்றனர். இதற்கென ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ.90,000/– நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டு, கல்லூரி முதல்வர்களின் பரிந்துரையின்படி படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை, 668 இளங்கவின்கலை மாணாக்கர்களும், 108 முதுகவின்கலை மாணாக்கர்களும் பயனடைந்துள்ளனர்.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்**

**1.37** தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றமானது, ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு, பொதுக்கல்வியுடன் அடிப்படைக் கலைக்கல்வி வழங்குதல், கலைப்பயிற்சிகள் வழங்குதல், கலையால் சிறார்களை வாழ்க்கையில் நல்வழிப்படுத்துதல், சிறார்களிடம் மறைந்துள்ள கலைத்திறமைகளை வெளிக்கொணர்தல், கலை நிகழ்ச்சிகளில் வாய்ப்பளித்து அதன்மூலம் அவர்களின் சிறப்புத் திறமைகளை கண்டறிதல் ஆகிய நோக்கங்களுக்காக 1979ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. தற்போது மாநிலம் முழுவதும் 40 இடங்களில், மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள்(24), விரிவாக்க மையங்கள்(14), ஊரக மையங்கள்(2) என செயல்பட்டு வருகின்றன.

**மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள்**

**1.38** சென்னை (மயிலாப்பூர் முதன்மை மையம்), புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோயில், தஞ்சாவூர், காஞ்சிபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் 24 மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள் செயல்படுகின்றன.

**சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்**

**1.39** பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை, நாமக்கல் மற்றும் சென்னையிலுள்ள இராமாபுரம், வியாசர்பாடி, வில்லிவாக்கம், சேலையூர், மேற்கு தாம்பரம் ஆகிய இடங்களில் 14 சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் செயல்படுகின்றன.

**சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள்**

**1.40** புதுக்கோட்டை மாவட்டம், பொன்புதுப்பட்டி, மதுரை எல்லீஸ் நகர் ஆகிய இரண்டு இடங்களில் சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் செயல்படுகின்றன.

**சவகர் சிறுவர் மன்றங்களின் பகுதிநேர பயிற்சிகள்**

**1.41** குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, அயல்முரசு (டிரம்ஸ்), அயல்முழவு (பேண்ட்ஸ்), தையல், ஓவியம்–வண்ணம் தீட்டுதல், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பாட்டம் ஆகிய மேற்காணும் கலைகளில், சென்னையில் மயிலாப்பூர் சிறுவர் மன்றத்தில் 16 வகையான கலைகளிலும், மாவட்டங்களில் அம்மாவட்டத்திற்கேற்ப ஏதேனும் 4 வகையான கலைகளிலும் சிறார்களுக்கு “பகுதி நேரக் கலைப்பயிற்சி” வழங்கப்படுகின்றன.

**பயிற்சித் திட்டங்கள்**

**மாவட்ட அளவில் கோடைக்கால கலைப்பயிற்சி முகாம்**

**1.42** மாணாக்கர்கள் கோடை விடுமுறையை பயன்தரும் வகையில் பயன்படுத்திட ஏதுவாக, சென்னை மற்றும் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட அளவில் கோடைக்கால கலைப்பயிற்சி முகாம்கள் **32** மாவட்டங்களில் **2018–2019** ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. சென்னையில் **02.05.2019** முதல் **11.05.2019** வரையிலும், ஏனைய மாவட்டங்களில் **26.04.2019** முதல் **15.05.2019** வரையிலும் இம்முகாம்கள் நடத்தப்பட்டன.

**மாநில அளவிலான கோடைக்கால கலைப்பயிற்சி முகாம்**

**1.43** மாநில அளவிலான கோடைக்கால கலைப்பயிற்சி முகாமில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த **100** சிறார்களுக்கு, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, யோகா, சிலம்ப£†ì‹ ஆகிய கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன.

**மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாம்**

**1.44** மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாமில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 100 சிறார்களுக்கு சுடுமண் சுதை சிற்பம், பொம்மை செய்தல், துணி ஓவியம், துணி அச்சு, கைவினை, மெழுகுவர்த்தி செய்தல் ஆகிய கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன.

**மாநில அளவிலான குளிர்கால முகாம்**

**1.45** இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் டி.டி.விநாயகர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், **23.12.2018** முதல் **31.12.2018** வரை மாநில அளவிலான ‘‘குளிர்கால கலைப்பயிற்சி முகாம்’’, உண்டு, உறைவிடப் பயிற்சியாக நடைபெற்றது. இம்முகாமில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 100 சிறார்களுக்கு, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, சிலம்பம், யோகா ஆகிய கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டன.

**மாவட்ட, மாநில அளவிலான கலைப்போட்டிகள்**

**1.46** மாணாக்கர்களிடையே கலை ஆர்வத்தை மேலும் வளர்த்திடும் வகையில், குரலிசை, பரதநாட்டியம், கிராமிய

நடனம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் 5 முதல் 8 வயது, 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது ஆகிய பிரிவுகளில், மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் நடத்தி, அப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டக் கலைப்போட்டிகள் முடிவுற்றவுடன் அப்போட்டிகளில் முதல் பரிசு பெற்ற 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது பிரிவு மாணாக்கர்களிடையே மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன. மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு முதல் பரிசாக ரூ.10,000/–, இரண்டாவது பரிசாக ரூ.7,500/– மற்றும் மூன்றாவது பரிசாக ரூ,5,000/– என மொத்தம் 24 மாணாக்கர்களுக்கு ரூ.1,80,000/–த்திற்கு பரிசுத் தொகைகளும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தேசிய அளவிலான திட்டங்களில் சவகர் சிறுவர் மன்ற மாணாக்கர்கள் பங்கேற்பு**

1.47 புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 அன்று, ‘‘குழந்தைகள் தினவிழா’’ கொண்டாடப்பட்டு வருகின்றது. அவ்வகையில், 14.11.2018 முதல் 16.11.2018 வரை ‘‘புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தில்’’ கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவில், தமிழகத்தினைச் சேர்ந்த தேசிய சிறுவர் மன்றத்தில் இணைவு பெற்று செயல்படும் 21 சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து 20 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு, தமிழகத்தின் பாரம்பரியத்தினை வெளிப்படுத்தும் வகையில், பரதநாட்டியம், கரகாட்டம், காவடியாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தி அனைவரின் பாராட்டுகளையும் பெற்றனர்.

மேலும், கர்நாடக மாநிலம், பெங்களூரு சவகர் சிறுவர் மன்றத்தில் 25.02.2019 முதல் 27.02.2019 வரை நடைபெற்ற 27வது தேசிய இளைஞர்களுக்கான சுற்றுச்சூழல் முகாமில் தமிழ்நாட்டிலுள்ள சவகர் சிறுவர் மன்றங்களைச் சார்ந்த 19 மாணாக்கர்கள் பங்குகொண்டு, தமிழகத்தின் கலை

நிகழ்ச்சிகளை நடத்தி, அனைவரின் பாராட்டுகளையும் பெற்றனர்.

**தேசிய பாலஸ்ரீ விருது**

**1.48** ஒவ்வொரு ஆண்டும் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் தேசிய பாலஸ்ரீ விருதிற்கு தகுதியான நபர்களை தெரிவு செய்ய போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் முறையே மேடைக்கலை படைப்பாற்றல் (Creative Performance – Dance, Vocal Music, Percussion/ Instrumental Music, Theatre Art and Puppetry), படைப்புக்கலை (Creative Art – Painting, Craft, Sculpture, Visual Art), படைப்பாற்றல் மிக்க அறிவியல் புதுமைகள் (Creative Scientific Innovations – Science Model Making, Science Project, Scientific Problem Solving, Scientific Innovation) மற்றும் எழுத்துக்கலை படைப்பாற்றல் (Creative Writing – Story, Prose, Poem, Dialogue and Play) ஆகிய 4 வகையான முதன்மைக் கலைகளில், 16 வகை கலைப்பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதற்கட்டமாக மாவட்ட அளவிலான போட்டிகளும், அதனைத் தொடர்ந்து மாநில அளவிலான போட்டிகளும் நடைபெறும். அதில் தெரிவு பெறுபவர்களிடையே தேசிய அளவிலான

போட்டிகள் நடத்தப்பட்டு, தகுதியும், திறமையும் வாய்ந்த சிறார்களுக்கு தேசிய சிறுவர் மன்றத்தால் ''தேசிய பாலஸ்ரீ விருது'' வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதானது மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் பெருமைமிக்க விருதாகும். மாவட்ட அளவிலான போட்டிகள் மாநில அரசின் நிதியுதவியிலும், மாநில அளவிலான போட்டிகள் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தின் நிதியுதவியிலும் நடத்தப்படுகின்றன. தேசிய அளவிலான போட்டிகள் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தில் நடத்தப்படுகின்றன.

2016ஆம் ஆண்டுக்கான தேசிய பாலஸ்ரீ விருதிற்கு தமிழகத்தைச் சேர்ந்த 6 சிறார்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். விரைவில் இவ்விருதாளர்களுக்கு புதுதில்லியில் உள்ள ''தேசிய சிறுவர் மன்றத்தின்'' மூலம் ஒவ்வொரு விருதாளர்களுக்கும் ''தேசிய பாலஸ்ரீ'' விருதும், ரூ.15,000/– மதிப்பிலான ''கிசான் விகாஸ்'' பத்திரமும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படவுள்ளன. மேலும் ''தேசிய பாலஸ்ரீ'' விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 6 மாணாக்கர்களுக்கு தமிழக அரசின் சார்பாக இணையான நல்கைத் தொகையாக கூடுதல் பரிசு தலா ரூ.15,000/– விரைவில் வழங்கப்படவுள்ளன.

**2018–2019 ஆம் ஆண்டில் முக்கிய சாதனைகள்**

**1.49 மாவட்ட அளவிலான கலை விருதுகள்**

1. திருநெல்வேலி மாவட்டத்தில், **16.04.2018** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், **2016–2017, 2017–2018** ஆகிய ஆண்டுகளுக்கு **10** கலைஞர்களுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

2. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் **18.04.2018** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில் **2017–2018**ஆம் ஆண்டுக்கு **5** கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

3. புதுக்கோட்டை மாவட்டத்தில், **21.04.2018** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், **2014–2015, 2015–2016, 2016–2017, 2017–2018** ஆகிய ஆண்டுகளுக்கு **20** கலைஞர்களுக்கு மாண்புமிகு மக்கள்

நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

4. ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் **22.04.2018** அன்று நடைபெற்ற அரசின் சாதனை விளக்கக் கண்காட்சியின் தொடக்க விழாவில், **2016–2017, 2017–2018** ஆகிய ஆண்டுகளுக்கு **10** கலைஞர்களுக்கு மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

5. வேலூர் மாவட்டம், ஏலகிரியில் **20.05.2018** அன்று நடைபெற்ற கோடை விழாவில் **2015–2016, 2016–2017** ஆகிய ஆண்டுகளுக்கு **10** கலைஞர்களுக்கு மாண்புமிகு வணிக வரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

6. திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூரில் **16.06.2018** அன்று நடைபெற்ற கோடைவிழாவின் தொடக்க விழாவில் **2014–2015, 2015–2016** ஆகிய

ஆண்டுகளுக்கு 10 கலைஞர்களுக்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

7. விருதுநகர் மாவட்டத்தில் **29.06.2018** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், **2016–2017, 2017–2018** ஆகிய ஆண்டுகளுக்கு 10 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

8. கன்னியாகுமரி மாவட்டத்தில் **09.07.2018** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், **2016–2017, 2017–2018** ஆகிய ஆண்டுகளுக்கு 10 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

9. தூத்துக்குடி மாவட்டத்தில் **11.07.2018** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், **2016–2017, 2017–2018** ஆகிய

ஆண்டுகளுக்கு 10 கலைஞர்களுக்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

10. திண்டுக்கல் மாவட்டத்தில் 23.07.2018 அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், 2015–2016, 2016–2017, 2017–2018 ஆகிய ஆண்டுகளுக்கு 15 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

11. சிவகங்கை மாவட்டத்தில் 23.07.2018 அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், 2015–2016, 2016–2017, 2017–2018 ஆகிய ஆண்டுகளுக்கு 15 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

12. சேலம் மாவட்டத்தில் 16.08.2018 அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், 2017–2018ஆம் ஆண்டுக்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால்

‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கி சிறப்பு செய்யப்பட்டன.

13. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 25.08.2018 அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், 2011–2012 முதல் 2017–2018 வரையிலான ஆண்டுகளுக்கு 35 கலைஞர்களுக்கு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

14. கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் 25.08.2018 அன்று நடைபெற்ற ‘‘கோவை கலைத்திருவிழாவின்’’ தொடக்க விழாவில் 2016–2017, 2017–2018 ஆகிய ஆண்டுகளுக்கு 10 கலைஞர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

15. விழுப்புரம் மாவட்டத்தில் 08.09.2018 அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’

வழங்கும் விழாவில், **2016–2017, 2017–2018** ஆகிய ஆண்டுகளுக்கு **10** கலைஞர்களுக்கு மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

**16.** தருமபுரி மாவட்டத்தில் **22.09.2018** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், **2016–2017, 2017–2018** ஆகிய ஆண்டுகளுக்கு **10** கலைஞர்களுக்கு மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

**17.** திருப்பூர் மாவட்டத்தில் **02.10.2018** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், **2016–2017, 2017–2018** ஆகிய ஆண்டுகளுக்கு **10** கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

**18.** நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் **13.10.2018** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற

விருதுகள்'' வழங்கும் விழாவில், **2016–2017, 2017–2018** ஆகிய ஆண்டுகளுக்கு **10** கலைஞர்களுக்கு ''மாவட்டக் கலை விருதுகள்'' வழங்கப்பட்டன.

**19.** சென்னை மாவட்டத்தில் **13.02.2019** அன்று நடைபெற்ற ''மாவட்டக் கலை மன்ற விருதுகள்'' வழங்கும் விழாவில், **2014–2015** முதல் **2018–2019** வரையிலான ஆண்டுகளுக்கு **25** கலைஞர்களுக்கு ''மாவட்டக் கலை விருதுகள்'' வழங்கப்பட்டன.

**20.** அரியலூர் மாவட்டம், கங்கை கொண்ட சோழபுரத்தில் **28.01.2019** அன்று நடைபெற்ற ''மாவட்டக் கலை மன்ற விருதுகள்'' வழங்கும் விழாவில், **2012–2013** முதல் **2017–2018** வரையிலான ஆண்டுகளுக்கு **30** கலைஞர்களுக்கு ''மாவட்டக் கலை விருதுகள்'' வழங்கப்பட்டன.

**21.** கடலூர் மாவட்டத்தில் **16.02.2019** அன்று நடைபெற்ற ''மாவட்டக் கலை மன்ற விருதுகள்''

வழங்கும் விழாவில், **2008–2009** முதல் **2017–2018** வரையிலான ஆண்டுகளுக்கு **50** கலைஞர்களுக்கு மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களால் ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

**22.** திருவாரூர் மாவட்டத்தில் **04.03.2019** அன்று நடைபெற்ற ‘‘மாவட்டக் கலை மன்ற விருதுகள்’’ வழங்கும் விழாவில், **2010–2011** முதல் **2017–2018** வரையிலான ஆண்டுகளுக்கு **40** கலைஞர்களுக்கு ‘‘மாவட்டக் கலை விருதுகள்’’ வழங்கப்பட்டன.

## 1.50 முக்கிய நிகழ்வுகள்

**1.** ‘‘மாநில அளவிலான மரபு ஓவிய சிற்பக் கலைக்காட்சி’’ நடத்திட வழங்கப்பட்ட நல்கை ரூ.**10.00** இலட்சத்தில் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் ‘‘சிற்பக்கலைக்காட்சி’’ **05.03.2019** முதல் **11.03.2019** வரை நடைபெற்றது. சிறந்த கலைப் படைப்புகளை வழங்கிய

40 கலைஞர்களுக்கு ரொக்கப் பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஏராளமான பொதுமக்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் இக்கண்காட்சியில் கலைப் படைப்புகளை பார்வையிட்டனர்.

2. ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி ஆகிய இடங்களில் ‘‘மரபுவழி மற்றும் நவீன பாணி ஓவிய–சிற்பக் கலைக்காட்சிகள்’’ ரூ.10.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

3. தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக நிறுவனர் தின விழாவான “ஜெயம்–2019’’ விழாவினை சென்னை கலைவாணர் அரங்கில் 23.02.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைத்து மாணாக்கர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி

விழாப் பேருரையாற்றினார். இவ்விழா ரூ.10.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது. ஏராளமான மாணாக்கர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் இவ்விழாவில் திரளாக கலந்து கொண்டனர்.

4. சென்னை தீவுத்திடலில் 09.01.2019 அன்று "இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. இப்பொருட்காட்சியில் 10.01.2019 முதல் 03.03.2019 வரை காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மண்டலங்களின் சார்பில் மாநில அளவிலான நாட்டுப்புறக் கலைவிழா கலை நிகழ்ச்சிகள் ரூ.25.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

5. கலை பண்பாட்டுத் துறையுடன் இணைந்து சென்னை அரசு கவின்கலைக் கல்லூரி கலையரங்கில் 22.02.2019 முதல் 24.03.2019 வரை "சென்னை போட்டோ பினாலே 2019" நடத்தப்பட்டது. இப்புகைப்படக் கண்காட்சியினைக் காண, 5,624 பார்வையாளர்கள் வருகை புரிந்தனர். மேலும், பல்வேறு பள்ளிகளிலிருந்தும் மாணவர்கள் இக்கண்காட்சியினை பார்வையிட்டனர்.

6. தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையம், கலை பண்பாட்டுத் துறையுடன் இணைந்து தமிழகத்தில் ஏற்காடு கோடை விழா, ஊட்டி கோடை விழா, குற்றாலம் சாரல் விழா, சீர்காழி தமிழிசை மூவர் விழா, தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைச் பல்கலைக்கழக வளாகத்தில் "அனைத்திந்திய கிராமியக் கலை விழா" உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தியது.

## 1.51 அறிவிப்புகள் – 2018–2019

1. கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர்

மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.75.00 இலட்சம் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

2. மதுரை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ.95.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை பொதுப்பணித் துறை மேற்கொண்டு வருகிறது.

3. புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.100.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை பொதுப்பணித் துறை மேற்கொண்டு வருகிறது.

4. தமிழகத்தின் பல்வேறு கலை வடிவங்களை வளர்க்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமையான இளங்கலைஞர்களை கண்டறிந்து ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்படும் மாவட்டக் கலை

மன்றங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திட ஒரு மாவட்டத்திற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 32 மாவட்டங்களுக்கு தொடரும் செலவினமாக ரூ.64.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

5. நுண்கலைகளையும், நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்து வளர்த்திட ஒருமொத்த நிதியொதுக்கமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.00 கோடி தொகையினை 2018–2019ஆம் நிதியாண்டில் ரூ.2.65 கோடியாக உயர்த்தி ஆணையிட்டுள்ளது.

6. ஓவிய, சிற்பக் கலைஞர்களின் கலைத்திறமைகளை வெளிப்படுத்த, தனிநபர் க¬ô,காட்சி நடத்திடும் 4 கலைஞர்களுக்கு தலா ரூ.7,500/– வீதமும், கூட்டுக் க¬ô,காட்சி நடத்திடும் இரண்டு கலைக் குழுக்களுக்கு தலா ரூ.15,000/– வீதமும் என வழங்கப்பட்டு வந்த தொகை உயர்த்தப்பட்டு தனிநபர் நடத்தும் க¬ô,காட்சிக்கு ஒரு கலைஞருக்கு ரூ.25,000/– வீதம் 10 கலைஞர்களுக்கு ரூ.2.50 இலட்சம் மற்றும்

கூட்டுக் க¬ô,காட்சி நடத்தும் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.50,000/—வீதம் 5 குழுக்களுக்கு ரூ.2.50 இலட்சம் என ஒட்டுமொத்தமாக ரூ.5.00 இலட்சம் வழங்க நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு தனி நபர் மற்றும் கூட்டுக் க¬ô,காட்சிகள் நடத்தப்பட்டன.

7. ஆண்டுதோறும் ஏப்ரல் 29 அன்று கொண்டாடப்படும் ‘‘உலக நாட்டிய தினத்தை’’ தமிழகத்தில் கொண்டாடும் விதமாக மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக செவ்வியல் மற்றும் கிராமிய நடனங்கள் நடத்த தொடரும் செலவினமாக ரூ.15.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

8. ஆண்டுதோறும் ஜுன் 21 அன்று கொண்டாடப்படும் ‘‘உலக இசை தினத்தினை’’ தமிழகத்தில் கொண்டாடும் விதமாக, அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் வாயிலாக இசை நிகழ்ச்சிகள் மற்றும் இசைப் போட்டிகள் நடத்த ரூ.11.50 இலட்சம் மற்றும்

யுனெஸ்கோ (UNESCO) சென்னை மாநகரை படைப்பாற்றல் மிக்க இசை நகரமாக அறிவித்ததைத் தொடர்ந்து அதனை கொண்டாடும் வகையில் "சென்னையில் இசைவிழா" ரூ.10.00 இலட்சம் செலவில் நடத்திட ஆக மொத்தம் ரூ.21.50 இலட்சம் தொடரும் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**9.** ஆண்டுதோறும் மார்ச் 27 அன்று கொண்டாடப்படும் "உலக நாடக தினத்தினை" தமிழகத்தில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் கொண்டாடும் விதமாக புராண, இதிகாச, தமிழ்காப்பியங்கள், இலக்கியம், வரலாற்று, சமூக, நாட்டுப்புற நாடகங்களை மேடையேற்றிட தொடரும் செலவினமாக ரூ.15.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**10.** கலை பண்பாட்டு இயக்ககம், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், சவகர் சிறுவர் மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் ஆகிய அலுவலகங்களின்

பயன்பாட்டிற்கு தளவாடங்கள், கணினி மற்றும் உபகரணங்கள், நகல் எடுக்கும் இயந்திரங்கள் ஆகியவை வாங்கிட ரூ.18.00 இலட்சம் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மேற்கண்ட சாதனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

11. சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியின் சுடுமண் துறைக்கு புதிய "மின்சூளை" வாங்கிட ரூ.19.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, சாதனத்தை கொள்முதல் செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

12. சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களின் நலனுக்காக கலைப்பயிற்சிப் பொருட்கள் வாங்க ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த ரூ.7.75 இலட்சம் நிதியினை இரு மடங்காக உயர்த்தி ரூ.15.50 இலட்சமாக வழங்கப்பட்டது. அத்தொகையினை பயன்படுத்தி மேற்கண்ட மூன்று கல்லூரிகளுக்கும் கலைப்பயிற்சிப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

13. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் செயல்படுத்தப்படும் ''மாநிலங்களுக்கிடையேயான கலைப்பரிமாற்றத் திட்டத்திற்கு'' ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த ரூ.2.00 இலட்சம் தொகை ரூ.15.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

14. தமிழகத்தில் அரிய கலை சார்ந்த நூல்களை எழுதும் நூலாசிரியர்களின் படைப்புகளை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் பதிப்பித்து வெளியிட ரூ.10.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் 5 வயது முதல் 16 வயதிற்குட்பட்ட சிறார்களிடையே கலைப் பிரிவுகளில் நடத்தப்படும் மாவட்ட மற்றும் மாநில அளவிலான கலைப் போட்டிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.5.70 இலட்சம் தொகை ரூ.14.00 இலட்சமாக அரசால் உயர்த்தி வழங்கப்பட்டது. மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் நடத்திட ரூ.6.40 இலட்சம் தொகை விடுவிக்கப்பட்டு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மூலம் போட்டிகள் நடத்தப்பட்டு

வருகின்றன. மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் நிறைவு பெற்றவுடன், ரூ.7.60 இலட்சம் தொகையில் மாநில அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்படும்.

16. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் குளிர்கால மற்றும் கோடைக்கால விடுமுறைகளில் நடத்தப்படும் மாநில அளவிலான முகாம்களில் பரதநாட்டியம், குரலிசை, ஓவியம், கைவினை, நாட்டுப்புறக்கலை மற்றும் சிலம்பம் ஆகிய கலைப் பயிற்சிகளை இளம் சிறார்களுக்கு அளித்திட வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.4.00 இலட்சத்தினை 2018–2019ஆம் ஆண்டு முதல் ரூ.8.00 இலட்சமாக அரசால் உயர்த்தி வழங்கப்பட்டது. இந்நல்கையிலிருந்து இராமநாதபுரத்தில் 23.12.2018 முதல் 30.12.2018 வரை ரூ.4.00 இலட்சம் செலவில் ‘‘குளிர்கால பயிற்சி முகாம்’’ நடத்தப்பட்டது. கொடைக்கானலில் விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் 15.05.2019 முதல் 22.05.2019 வரை ரூ.4.00 இலட்சம் செலவில் ‘‘கோடைக்கால பயிற்சி

முகாம்'' நடத்தப்பட்டது. மேலும் மாநில அளவிலான கைவினை கலைப் பயிற்சி முகாம் நடத்த ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த ரூ.2.40 இலட்சம் தொகை 2018–2019ஆம் ஆண்டு முதல் ரூ.4.00 இலட்சமாக அரசால் உயர்த்தி வழங்கப்பட்டது. மேற்கண்ட தொகையில் மாநில அளவிலான ''கைவினை பயிற்சி முகாம்'' 24.09.2018 முதல் 02.10.2018 வரை திருப்பூர் நகரில் ரூ.4.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

17. ஆண்டுதோறும் ஏப்ரல் 15 அன்று கொண்டாடப்படும் ''உலக ஓவிய தினத்தை'' தமிழகத்தில் கொண்டாடும் விதமாக சவகர் சிறுவர் மன்றம் மூலம் ஓவியப் பயிற்சி முகாம் மற்றும் கலைக்காட்சிகள் நடத்திட ரூ.15.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.52 2018–2019ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்**

1. மத்திய அரசின் பாதுகாப்புத் துறையின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருவிடந்தையில் நடத்தப்பட்ட மாநாட்டில் (DefExpo-2018) 11.04.2018 முதல்

**14.04.2018** வரை காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மூலம் ரூ.**8.00** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**2.** ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் நடைபெற்ற அரசின் சாதனை விளக்க கண்காட்சியில் **22.04.2018** முதல் **28.04.2018** வரை கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ''மண்ணின் கலை விழா'' கலை நிகழ்ச்சிகள் ரூ.**1.00** இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

**3.** திருவள்ளூர் மாவட்டம், மணவூர்குப்பம் கண்டிகை கிராமத்தில், **30.04.2018** அன்று நடைபெற்ற ''கிராமத் திருவிழாவில்'' காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில், ரூ.**1.00** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**4.** சேலம் மாவட்டம், ஏற்காட்டில் **12.05.2018** முதல் **16.05.2018** வரை நடைபெற்ற ''கோடைவிழாவில்'' சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின்

சார்பில், ரூ.2.00 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

5. வேலூர் மாவட்டம், ஏலகிரியில் நடைபெற்ற “கோடைவிழாவில்” காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில், 19.05.2018 அன்று ரூ.0.25 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

6. நீலகிரி மாவட்டம், ஊட்டியில் நடைபெற்ற “கோடை விழாவில்” கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், 26.05.2018 மற்றும் 27.05.2018 ஆகிய நாட்களில் ரூ.1.00 இலட்சம் செலவில் “மண்ணின் கலை விழா” கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

7. தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம் உப்பலவாடியில், தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், 04.06.2018 அன்று ரூ.0.40 இலட்சம் செலவில் “மண்ணின் கலை விழா” கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

8. திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் **16.06.2018** மற்றும் **17.06.2018** ஆகிய நாட்களில் நடைபெற்ற "கோடைவிழாவில்", காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில், ரூ.**0.96** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

9. கன்னியாகுமரி மாவட்டத்தில் **21.06.2018** முதல் **24.06.2018** வரை நடைபெற்ற "குமரி கலைத் திருவிழாவில்", திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், "மண்ணின் கலை விழா" கலை நிகழ்ச்சிகள் ரூ.**2.00** இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

10. திருவாரூர் மாவட்டம், மூவர் கோட்டையில் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், **25.06.2018** அன்று ரூ.**0.25** இலட்சம் செலவில் "மண்ணின் கலை விழா" கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

11. விருதுநகர் மாவட்டத்தில் **11.05.2018, 08.07.2018** மற்றும் **07.08.2018** ஆகிய நாட்களில் திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், "மண்ணின்

கலை விழா'' கலை நிகழ்ச்சிகள் ரூ.2.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

12. தஞ்சாவூரில் 21.07.2018 மற்றும் 22.07.2018 ஆகிய நாட்களில் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.0.60 இலட்சம் செலவில் ''மண்ணின் கலை விழா'' கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

13. விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலையில், 14.07.2018 மற்றும் 15.07.2018 ஆகிய நாட்களில் நடைபெற்ற ''கோடைவிழாவில்'', தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில், ரூ.0.50 இலட்சம் செலவில் ''மண்ணின் கலை விழா'' கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

14. திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் 28.07.2018 முதல் 04.08.2018 வரை நடைபெற்ற ''சாரல் திருவிழாவில்'' திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.2.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

15. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில், **03.08.2018** அன்று நடைபெற்ற ‘‘வல்வில் ஓரி’’ விழாவில், சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.**2.00** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

16. ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் **03.08.2018** அன்று நடைபெற்ற “தீரன் சின்னமலை’’ விழாவில் கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.**1.00** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

17. திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி மலையில் **03.08.2018** அன்று நடைபெற்ற ‘‘ஆடிபெருந் திருவிழாவில்’’ கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.**1.00** இலட்சம் செலவில் ‘‘மண்ணின் கலை விழா’’ கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

18. தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் **04.08.2018** அன்று நடைபெற்ற ‘‘ஆடிப்பெருக்கு விழாவில்’’ சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில்,

ரூ.1.00 இலட்சம் செலவில் “மண்ணின் கலை விழா” கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

19. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் 05.08.2018 முதல் 07.08.2018 வரை நடைபெற்ற “ஆடிக்கிருத்திகை திருவிழாவில்”, காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.1.00 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

20. காஞ்சிபுரம் மாவட்டம், புஞ்சரசந்தாங்கலில் கட்டைக்கூத்து சங்கம் வாயிலாக, 14.08.2018 அன்று நடத்தப்பட்ட “கட்டைக்கூத்து கலை விழா 2018” செலவினங்களுக்காக ரூ.1.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு விழா நடத்தப்பட்டது.

21. கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் 25.08.2018 மற்றும் 26.08.2018 ஆகிய நாட்களில் கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.3.00 இலட்சம் செலவில் “கோவை கலைத்திருவிழா” நடத்தப்பட்டது.

22. திருப்பூர் மாவட்டத்தில் 30.09.2018 முதல் 01.10.2018 வரை கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு

மையத்தின் சார்பில், ரூ.1.00 இலட்சம் செலவில் ‘‘மண்ணின் கலை விழா’’ கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

23. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் 04.10.2018, 19.10.2018 மற்றும் 20.10.2018 ஆகிய நாட்களில் நடைபெற்ற ‘‘தாமிரபரணி புஷ்கர விழாவில்’’, திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.2.00 இலட்சம் செலவில் ‘‘மண்ணின் கலை விழா’’ கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

24. விழுப்புரம் மாவட்டத்தில் 14.10.2018 அன்று நடத்தப்பட்ட ‘‘6ஆவது உலகத்தமிழர் பொருளாதார மாநாட்டில்’’ தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.0.35 இலட்சம் செலவில் ‘‘மண்ணின் கலை விழா’’ கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

25. தஞ்சாவூர் மாவட்டத்தில் 19.10.2018 மற்றும் 20.10.2018 ஆகிய நாட்களில் நடத்தப்பட்ட ‘‘மன்னர் இராஜ ராஜசோழன் சதய விழாவில்’’ தஞ்சாவூர் மண்டலக்

கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.0.80 இலட்சம் செலவில் ''மண்ணின் கலை விழா'' கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

26. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ''வீரப்பாண்டியபுரம் ஆலயத் திருவிழாவில்'' 09.12.2018 அன்று திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.2.00 இலட்சம் செலவில் ''மண்ணின் கலை விழா'' கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

27. திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 15.12.2018 முதல் 17.12.2018 வரை, ஈரோடு மாவட்டம், கொடுமுடி அருள்மிகு மகுடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் 01.01.2019 முதல் 03.01.2019 வரை, சேலம் கலை பண்பாட்டு மைய வளாகம் மற்றும் அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி ஆலயத்தில் 03.01.2019 முதல் 05.01.2019 வரை, காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் 05.01.2019 அன்றும், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயிலில் 10.01.2019 அன்றும், தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அருள்மிகு ஐயாறப்பர்

திருக்கோயிலில் **10.01.2019, 11.01.2019** ஆகிய நாட்களிலும், மதுரை மாவட்டம், அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயிலில் **12.01.2019** அன்றும் ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் சார்பில், ரூ.**15.00** இலட்சம் செலவில் ‘‘மார்கழி இசை விழாக்கள்’’ நடத்தப்பட்டன.

**28.** கடலூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், **17.02.2019** அன்று ரூ.**1.00** இலட்சம் செலவில் ‘‘மண்ணின் கலை விழா’’ கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**29.** காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் அருள்மிகு கைலாசநாதர் கோயிலில் **04.03.2019** அன்று நடைபெற்ற ‘‘மகாசிவராத்திரி விழாவில்’’ காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.**0.75** இலட்சம் செலவில் ‘‘மண்ணின் கலை விழா’’ கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**30.** புதுக்கோட்டை மாவட்டம், திருநெடுங்குடியில் **04.03.2019** அன்று நடைபெற்ற ‘‘மகாசிவராத்திரி விழாவில்’’, திருச்சிராப்பள்ளி மண்டலக் கலை

பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.**1.55** இலட்சம் செலவில் “மண்ணின் கலை விழா” கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**31.** நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், **06.03.2019** அன்று ரூ.**2.00** இலட்சம் செலவில் “மண்ணின் கலை விழா” கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**32.** அரியலூர் மாவட்டம், திருமழப்பாடியில் **16.03.2019** அன்று திருச்சிராப்பள்ளி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.**1.55** இலட்சம் செலவில் “மண்ணின் கலை விழா” கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**33.** சென்னை, பாரதிய வித்யா பவனில் **30.03.2018** முதல் **03.04.2018** வரை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், ரூ.**5.26** இலட்சம் செலவில் “இசை விழா” நடத்தப்பட்டது.

**34.** “உலக நாடக தினத்தினை” முன்னிட்டு, சென்னை, ஸ்ரீ தியாகபிரம்ம கானசபா நிறுவனத்துடன் இணைந்து

வாணி மகாலில், **12.05.2018** முதல் **20.05.2018** வரை மற்றும் பாரத் கலாச்சார் நிறுவனத்துடன் இணைந்து சென்னை, ஒய்.ஜி.பி. கலையரங்கில் **04.08.2018** முதல் **19.08.2018** வரை ரூ.**2.25** இலட்சம் செலவில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நாடகங்கள் நடத்தப்பட்டன.

**35.** கரூர் நாரதகான சபாவுடன் இணைந்து **13.10.2018** முதல் **24.10.2018** வரை, மதுரை ஸ்ரீ சத்குரு சங்கீத சமாஜத்துடன் இணைந்து **14.10.2018** முதல் **17.10.2018** வரை, பொள்ளாச்சி தமிழிசை சங்கத்துடன் இணைந்து பொள்ளாச்சியில் **19.11.2018** முதல் **22.11.2018** வரை, சென்னை நாரத கான சபாவுடன் இணைந்து **14.11.2018** முதல் **17.11.2018** வரை ரூ.**8.38** இலட்சம் செலவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் ‘‘நாடகத் திருவிழாக்கள்’’ நடத்தப்பட்டன.

**36.** திருச்சிராப்பள்ளி, ஆர்.ஆர்.சபா அரங்கில் **17.12.2018** அன்றும், மதுரை தமிழ்ச் சங்கத்தில் **28.12.2018** அன்றும், சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் **25.01.2019** அன்றும் மற்றும் சென்னை, பாரதிய வித்யா பவனில் **10.02.2019** அன்றும் ரூ.**2.68** இலட்சம் செலவில்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் "இயல் விழாக்கள்" நடத்தப்பட்டன.

37. சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் 21.01.2019 முதல் 24.01.2019 வரை மற்றும் சென்னை தீவுத்திடல் அண்ணா கலையரங்கில் 26.01.2019 அன்று ரூ.3.91 இலட்சம் செலவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் "நாட்டிய விழாக்கள்" நடத்தப்பட்டன.

38. சென்னை, கிருஷ்ண கான சபாவில் 26.09.2018 அன்றும், சென்னை, ரஷ்யன் கலாச்சார மையத்தில் 10.01.2019 அன்றும், சென்னை, தீவுத்திடல் அண்ணா கலையரங்கில் நடைபெற்ற "45வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில்" 01.02.2019 முதல் 17.02.2019 வரையிலும், "கிராமியக் கலை விழாக்கள்" ரூ.10.29 இலட்சம் செலவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நடத்தப்பட்டன.

39. சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 06.02.2019 முதல் 08.02.2019 வரை மற்றும் தமிழ்நாடு திறந்தநிலை

பல்கலைக்கழகத்தில் **27.03.2019** அன்று கல்லூரி மாணாக்கர்களுக்கான ‘‘முத்தமிழ் பயிற்சி முகாம்’’ ரூ.**2.14** இலட்சம் செலவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடத்தப்பட்டன.

**40.** நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் **13.10.2018** அன்றும் மற்றும் மாமல்லபுரம் கடற்கரை கோயிலில் நடைபெற்ற ‘‘உலக மரபு வார சிறப்பு நிகழ்வில்’’ **19.11.2018** முதல் **25.11.2018** வரையும் ரூ.**6.19** இலட்சம் செலவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் “வானவில்’’ கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**41.** திருவையாறு தமிழிசை மன்றத்தின் வாயிலாக **14.01.2018** முதல் **16.01.2018** வரை நடத்தப்பட்ட ‘‘**47**வது தமிழிசை விழாவிற்கு’’ ரூ.**3.00** இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

**42.** சென்னை வானவில் பண்பாட்டு மையத்தின் சார்பில் **08.12.2018** முதல் **09.12.2018** வரை நடத்தப்பட்ட ‘‘மகாகவி பாரதி’’ விழாவிற்கு ரூ.**6.00** இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

## 1.53 2018–2019ஆம் ஆண்டில் வெளிமாநிலங்களில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்

1. உத்திரகாண்ட் மாநிலம், ரிஷிகேஷ் நகரில் நடைபெற்ற ‘‘உலக நாட்டிய தின விழாவில்’’, 29.04.2018 அன்று சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில், ரூ.2.94 இலட்சம் செலவில் ‘‘கிராமியக் கலை நிகழ்ச்சிகள்’’ நடத்தப்பட்டன.

2. பஞ்சாப் மாநிலம், சண்டிகர் தமிழ் சங்கத்தில் 25.05.2018 முதல் 27.05.2018 வரை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், ரூ.2.28 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

3. கர்நாடக மாநிலம், பெங்களூரில் நடைபெற்ற ‘‘13வது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாட்டில்’’ 16.06.2018 அன்று தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.1.85 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

4. புதுதில்லி, இந்தியா கேட்டில் நடைபெற்ற "பர்யதன் பர்வ்" என்ற நிகழ்ச்சியில், **22.09.2018** மற்றும் **23.09.2018** ஆகிய நாட்களில் திருச்சிராப்பள்ளி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.**4.82** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

5. ஆந்திர மாநிலம், திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் நடைபெற்ற பிரமோத்சவ விழாவில் காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில் **16.09.2018** மற்றும் **17.09.2018** ஆகிய இரண்டு நாட்கள் ரூ.**2.30** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

6. ஆந்திர மாநிலம், திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் நடைபெற்ற பிரமோத்சவ விழாவில் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், **12.10.2018** மற்றும் **13.10.2018** ஆகிய இரண்டு நாட்கள்

ரூ.3.00 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

7. ஆந்திர மாநிலம், திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் நடைபெற்ற பிரமோத்சவ விழாவில் கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், 08.12.2018 மற்றும் 09.12.2018 ஆகிய இரண்டு நாட்கள் ரூ.2.95 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

8. ஐதராபாத் மாநகர தமிழ் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஆண்டுவிழா நிகழ்ச்சியில் திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில், 16.12.2018 அன்று ஐதராபாத் மற்றும் செகந்திராபாத் ஆகிய நகரங்களில் ரூ.2.85 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

9. புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில் 13.01.2019 முதல் 15.01.2019 வரை நடைபெற்ற “பொங்கல் கலைவிழாவில்”, காஞ்சிபுரம் மண்டலக் கலை

பண்பாட்டு மையம் சார்பில், ரூ.**4.21** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**10.** புதுதில்லி, செங்கோட்டையில் இந்திய அரசு, மத்திய சுற்றுலா அமைச்சகத்தினால் நடத்தப்பட்ட குடியரசு தினவிழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற "பாரத் பர்வ் **2019**" என்ற நிகழ்ச்சியில் **31.01.2019** அன்று மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.**2.99** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**11.** மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தா தமிழ் சங்கத்தில் **20.01.2019** அன்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், ரூ.**0.90** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**12.** உத்திரபிரதேச மாநிலம், பிரயாக்ராஜ் நகரில் நடைபெற்ற "கும்பமேளாவில்" **28.02.2019** முதல் **02.03.2019** வரை சேலம் மண்டலக் கலை பண்பாட்டு

மையத்தின் சார்பில், ரூ.7.29 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**2018–2019 ஆம் ஆண்டில் அயல்நாடுகளில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்**

**1.54** மலேசியா பத்துமலை ஸ்ரீ சிவசுப்ரமணிய ஆலயத்தில் நடைபெற்ற ‘‘குடமுழுக்கு விழாவில்’’ **29.08.2018** முதல் **31.08.2018** வரை சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில், ரூ.**8.00** இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**முடிவுரை**

**1.55** தமிழ் பண்பாடு, கலைகள் மற்றும் அதன் தனித்துவமான அடையாளங்களை பாதுகாப்பதற்கான பல்வேறு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை கலை பண்பாட்டுத் துறை மேற்கொண்டு வருகிறது. இளைய சமுதாயத்தினருக்கு, இசை, நடனம், நாடகம், கிராமியக்கலை, ஓவியம், சிற்பம் உட்பட அனைத்துவிதமான நிகழ்த்துக் கலைகள் மற்றும் நுண்கலைகளில் பயிற்சி வழங்கி வருகிறது.

கலை வடிவங்களை ஆவணப்படுத்தும் பணிகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. மாவட்டங்கள், பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தி, அதன் வாயிலாக தமிழ் பண்பாடு மற்றும் கலைகளை பரவலாக மக்களிடம் கொண்டு செல்கிறது. சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கவும், வறிய நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும் இத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய செயல்களை மிகுந்த ஊக்கத்துடனும், வெற்றிகரமாகவும் இத்துறை தொடர்ந்து செயல்படுத்திடும்.

## அருங்காட்சியகங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2019–2020

**முன்னுரை**

**2.** ஒவ்வொரு அருங்காட்சியகமும் ஒரே நேரத்தில் பல்வேறு அரும்பணிகள் ஆற்றும் தனிச்சிறப்பு வாய்ந்ததோர் இடமாகும். பண்டைய பணித்திறன்களைப் பறைசாற்றும் ஆதார மையமாக அது செயல்படுகிறது. தொழில்நுட்பம், கட்டுமானம், கலை மற்றும் தகவல் தொடர்பு முதலியவற்றை ஒருங்கிணைத்து காலம் காலமாக ஏற்படும் வளர்ச்சியினால் உயர்ந்த நிலையை அடைகின்ற ஒரு மனித சமுதாயத்தின் நாகரிக வரலாற்றை காலவரிசைப்படி பதிவு செய்ய அருங்காட்சியகங்கள் உதவுகின்றன.

வரலாறு அல்லது கலைப் படைப்பின் ஒரு பகுதியினை பாதுகாக்க மிகுந்த பங்களிப்பும் விடாமுயற்சியும் தேவைப்படுகிறது; அருங்காட்சியகத்தின் ஒவ்வொரு காட்சிப்பொருளும் அதன் நினைவுப் பொருளாகும். பொதுமக்களின் வருகையையும் ஆர்வத்தையும் இணைப்பதே அருங்காட்சியகத்தின் செயல்பாடு ஆகும். உள்ளூர்வாசிகள்,

சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஏனையோரின் அதிலும் குறிப்பாக சிறார்களின் ஆர்வத்தைத் தூண்டுவதே அருங்காட்சியகத்தின் முக்கிய நோக்கமாகும். அருங்காட்சியகங்கள் என்பன வெறும் கட்டடம் மற்றும் கலைப்பொருட்கள் பற்றியது மட்டும் அல்ல; அதனுள் சென்று வருவோரின் புரிதலும் அவர்கள் பெற்றுக் கொண்ட அறிவார்ந்த விவரங்களுமேயாகும்.

நமது மூதாதையர் நெருப்பைக் கண்டுபிடித்த நாள்முதல் வளர்ச்சியடைந்து இன்றைய மரபணுக் குறியீடுகளை கையாளுதல் வரையிலான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் வாழ்க்கையின் வெற்றி தோல்விகள் பின்னிப் பிணைந்துள்ளன. நம்முடைய பாரம்பரிய பண்பாடு மற்றும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கிடையேயான தொடர்பு குறித்த விழிப்புணர்வு அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது. இந்த விழிப்புணர்வினால், மாந்தர் மனதில் ஆழ்ந்த தாக்கத்தையும் ஏற்படுத்த பல்வேறு தொழில்நுட்பக் கருவிகளின் துணை தேவைப்படுகின்றன. அதற்கேற்றவாறு அருங்காட்சியகங்கள் செயல்படுகின்றன.

அருங்காட்சியகங்கள் நீண்ட வரலாற்றுப் பின்னணி உடையன. உலகில் முதலில் தோன்றிய சில அருங்காட்சியகங்கள், கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே தொடங்கப்பட்டவையாகும். காலப்போக்கில், முதன்மையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் பண்பாடு உருவாகி அது உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. இத்தனை ஆண்டுகளாக பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, நாம் எவ்வாறு வாழ்ந்து வந்தோம் என்பதை எடுத்தியம்புவதே இந்த நூற்றாண்டின் உலகளாவிய அருங்காட்சியக கருப்பொருளாகும். அருங்காட்சியகங்கள் ஒரு நாட்டின் பண்பாட்டு செல்வத்தினை தன்னகத்தே தக்க வைத்து, அவற்றை வரும் தலைமுறையினருக்கு முன்னெடுத்துச் செல்லும் அறிவுக் களஞ்சியங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

பன்னாட்டு அருங்காட்சியகங்களின் அவையம் (ICOM), ஆஸ்திரியா வியன்னாவில் 2007–ஆம் ஆண்டு ஆகஸ்டு 24 ஆம் தேதி நடைபெற்ற 22வது பொதுக் குழுவில் “அருங்காட்சியகம் என்பது ஒரு இலாப நோக்கற்ற சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டிற்காகவும் செயல்படும் ஒரு நிலைத்த நிறுவனம். பொதுமக்களின்

பார்வைக்காக அரும்பொருள்களை சேகரிப்பது, பாதுகாப்பது, ஆய்வு மேற்கொள்வது அவற்றை வெளியிடுவது தொட்டுணரும் மற்றும் தொடவியலா மானுடப் பண்பாடு மற்றும் சூழலியல் சார் பொருண்மைகளை கல்வி, ஆய்வு மற்றும் கண்டு மகிழும் காரணங்களுக்காக காட்சிப்படுத்துவது அருங்காட்சியகங்களின் தலையாய நோக்கமாகும்'' என்று வரையறை செய்துள்ளது.

மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் நிலைநிறுத்தும் முகவர்களாக செயல்படும் இன்றைய அருங்காட்சியகங்கள், அதனைச் சார்ந்த சமூகத்தினை பிரதிபலிக்கின்றன மற்றும் பழங்காலத்தையும், அக்கால மக்களையும், வாழ்வியலையும் உற்று நோக்கி முன்னேறுவதற்கான கருவிகளாகவும் அவை செயல்படுகின்றன. ஒரு நாட்டின் ஜனநாயக கொள்கைகளை மேம்படுத்துதல், வளர்த்தல், ஊக்குவித்தல் போன்ற பணிகளுடன், சமூகத்தின் ஒருமித்த வளர்ச்சிக்கான கருத்துக்களைத் தோற்றுவிப்பதற்கான கலந்துரையாடல் மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கான தளத்தினை அமைத்துத்தரும் பணியையும் அருங்காட்சியகங்கள் மேற்கொள்கின்றன. தனது செயல்பாடுகள் வாயிலாக ஆசிரியர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள், இளைஞர்கள்,

மகளிர் ஆகியோரிடையே தேசத்தின் குறிக்கோள்கள் மற்றும் பாரம்பரியத்தினைப் பற்றிய நல்ல புரிதலை ஏற்படுத்துகின்றன. எந்த ஒரு நாட்டிற்கும் பண்பாட்டின் பிரதிபிம்பமாக விளங்கும் அரும்பொருள்களின் பாதுகாவலராக திகழும் அருங்காட்சியகங்கள், ஒரு நாட்டின் கட்டமைப்பை ஒற்றுமைப்படுத்தும் ஒருங்கிணைப்பாளராக பங்காற்றி வருகின்றன. குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து நடைபெறும் வழிகாட்டுதலுடன் கூடிய உலா, கருத்தரங்குகள், பணிப்பட்டறைகள், போட்டிகள், சொற்பொழிவுகள், செயல்விளக்கங்கள், கண்காட்சிகள் மற்றும் வெளியீடுகள் போன்றவை அருங்காட்சியகம் மற்றும் சமுதாயம் ஆகிய இரண்டும் ஒன்றுடன் ஒன்று நிலைத்த தொடர்புகளை மேம்படுத்திக்கொண்டு, ஒருமித்த வளர்ச்சிக்கான வகை செய்கின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியான கைப்பேசி செயலிகள், மெய்நிகர் காட்சியமைப்பு, உண்மைத் தோற்ற மீட்டுருவாக்கம், சமூக ஊடகங்கள், ஊடாடுஊடகங்கள் மற்றும் 360° கோண மெய்நிகர் உலா போன்றவை உலகின் எந்த ஒரு மூலையில் வசிக்கும் மனிதனுக்கும் அருங்காட்சியகத்தினை கொண்டுபோய்ச் சேர்த்து விடுகின்றன. இந்த தொழில்நுட்ப சாதனங்களின் அறிமுகம்

அருங்காட்சியகங்களை இணையற்ற நிலைக்கு கொண்டு செல்வதால், இந்த தொழில்நுட்பங்களை, நன்கு பயன்படுத்துவதற்கு அருங்காட்சியகங்கள் துறை முனைந்து செயல்படுகின்றது.

**துறையின் நோக்கம்**

**2.1** அரும்பொருட்களை சேகரித்தல் (collection), பாதுகாத்தல் (conservation), ஒப்பு நோக்குதல் (correlation), கருத்துசார் காட்சியமைத்தல் (curation) மற்றும் தகவல் அளித்தல் (communication) போன்றவை அருங்காட்சியகங்கள் துறையின் முக்கிய நோக்கங்களாகும். காட்சிப்பொருள்களை சேகரித்தல், எதிர்கால சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்கள் பார்வையிட ஏற்ற வகையில் காட்சிப்படுத்துதல் ஆகியன கல்விக்கும், அரும்பொருட்களை நிர்வகிப்பதற்கும் கட்டாயமான ஒன்றாகும். பொதுமக்களுக்கு கல்வி வழங்குதல் என்ற மாபெரும் பணியே ஒரு அருங்காட்சியகத்தின் முக்கிய குறிக்கோளாகும். கருத்துப் பரிமாற்றம் இருவழிப் பரிமாற்றமாக அமைவதுடன், கல்வி என்பது தொடர்ந்து நடைபெறும் செயல்பாடாகவும் விளங்க

வேண்டும். அறிவுச் சுரங்கமாக அருங்காட்சியகம் விளங்கும் சூழலில், அருங்காட்சியகம் மற்றும் மக்களிடையே நிலவும் தொடர்பானது சுமுகமாகவும், நல்ல நிலையிலும் அமைய வேண்டும். அறிவொளி பரப்புவதே இத்துறையின் முதன்மையான நோக்கமாகும். உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் வழியே உள்நாட்டு, பன்னாட்டு தளங்களில் பண்பாடு பற்றிய விழிப்புணர்வை பரவலாக்கம் செய்தல் மற்றொரு முக்கிய நோக்கமாகும்.

**நிர்வாக அமைப்பு**

**2.2** அருங்காட்சியகங்கள் துறையில், அரசு அருங்காட்சியகம், சென்னை மற்றும் **20** மாவட்ட அருங்காட்சியகங்கள் செயல்பட்டு வருகின்றன. அருங்காட்சியகங்கள் துறையின் இயக்குநர் தலைமையில், உதவி இயக்குநர் (தொழில்நுட்பம்), காப்பாட்சியர்கள், உதவிக் காப்பாட்சியர்கள், காட்சிக்கூட விளக்குநர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் ஆகியோர்களைக் கொண்டு இத்துறை இயங்கி வருகிறது.

**அரசு அருங்காட்சியகம், சென்னை**

**2.3** நமது நாட்டின் இரண்டாவது பெரிய அருங்காட்சியகமாகத் திகழும் சென்னை, அரசு அருங்காட்சியகம், **1851** ஆம் ஆண்டு சிறிய அளவில் தொடங்கப்பட்டு, **1854–**இல் இப்புதிய வளாகத்திற்கு மாற்றப்பட்டது**.** உரோமாபுரியைச் சார்ந்த தொல்பொருட்களை அதிக எண்ணிக்கையில் கொண்ட ஆசிய அருங்காட்சியகங்களில் இதுவும் ஒன்றாகும்**.** மேலும் இது, தொல்லியல், மானிடவியல் மற்றும் நாணயவியல் சார்ந்த அரும்பொருட்களையும் அதிகளவில் கொண்டுள்ளது**. 57** காட்சிக்கூடங்களில் உள்ள பல்வேறுபட்ட கலைப்பொருட்கள் கண்ணுக்கும் காட்சிக்கும் விருந்தாகும்**. 16.25** ஏக்கர் பரப்பளவு கொண்ட இவ்வளாகத்தில் தனித்தனியே ஆறு கட்டடங்களில் இடம்பெற்றுள்ள காட்சிப் பொருட்கள் தனித்துவம் வாய்ந்தவை மற்றும் அரிதினும் அரிதானவையாகும்**.** அண்மையில் புத்தாக்கம் செய்யப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய காலக் காட்சிக்கூடத்தில் மாநிலத்திலேயே மிகவும் பழமையான கற்கால மற்றும் இரும்புக்கால கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன**.** அரிக்கமேட்டில் கிடைத்த உரோமானிய ஆம்போரா

குடுவைகளின் துண்டுகள், மணிகள் மற்றும் நீலகிரி சுடுமண் மூடிகள் ஆகியன நாட்டின் சிறந்த மானிடவியல் சேகரிப்புகளாகும். அமராவதி சிற்பங்கள் அருமையாக பௌத்த ஜாதக கதைகளைக் கூறுவதுடன் அழகில் இணையற்றவை. பல்லவர், சோழர் மற்றும் விஜயநகர கால செப்புப் படிமங்கள் ஆய்வாளர்களிடையே ஆர்வமூட்டுவதாகவும், பொதுமக்களால் விரும்பப் படுவதாகவும் உள்ளன. பௌத்த சமய படிம வரைவியலின் உச்சத்தினை செல்லூார் பௌத்தப் படிமங்கள் காட்டுகின்றன. பல்லாயிரம் ஆண்டு கால பழமை வாய்ந்த ராபர்ட் புரூஸ் பூட் அவர்கள் கண்டெடுத்த பழைய கற்காலக் கருவிகள் அரிதானவை. நீலத் திமிங்கிலத்தின் நீண்ட எலும்புக் கூட்டினை காணும்போது, அதன் உருவத்தை எண்ணி நாம் வியப்பில் ஆழ்கிறோம். விலங்கியல் மற்றும் தாவரவியல் காட்சிக்கூடங்கள், மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும், ஒரு கருவூலமாக விளங்குகின்றன. வேதியியல் பாதுகாப்பு பிரிவு, வேதியியல் பாதுகாவலர்களையும், ஆய்வாளர்களையும் ஒருங்கே ஈர்க்கிறது. சென்னை மெரினாக் கடற்கரையில் உள்ள புகழ்பெற்ற உழைப்பாளர் சிலையை உருவாக்கிய தே.பி.ராய்சௌதுரி அவர்களால் உருவாக்கப்பட்ட மகாத்மா

காந்தி சிலையும் அருங்காட்சியக சேகரிப்பில் உள்ள அரிய கலைப்பொருட்களில் ஒன்றாகும். இராஜா ரவிவர்மா போன்ற பழம்பெரும் கலைஞர்களின் ஓவியங்கள், பண்டைய முகலாய ஓவியங்கள், இராஜபுத்திர சிற்றோவியங்கள், தோலில் வரையப்பட்ட ஓவியங்கள், தந்தத்தில் செய்யப்பட்ட சிற்பங்கள், தனித்துவம் வாய்ந்த தஞ்சாவூர் ஓவியங்கள், தஞ்சாவூர் கோடாலிக்கருப்பூர் புடவைகள் ஆகியன அருங்காட்சியக காட்சியமைப்பை அலங்கரிக்கின்றன. தங்களை அதிகம் கவரும் நாணயவியல் காட்சிக் கூடத்தை சிறார்கள் விரும்பி பார்வையிடுகிறார்கள். சிறுவர் அருங்காட்சியகத்தின் ஊடாடு காட்சியமைப்புகளும், ஆளுயர மாதிரிகளும் சிறுவர்களை ஈர்க்கின்றன. நடமாடும் அருங்காட்சியக உலா பேருந்து, மாநிலம் முழுவதும் உள்ள சிறார்களை நாடிச் செல்கிறது.

**மாவட்டங்களில் அரசு அருங்காட்சியகங்கள்**

**2.4** தமிழ்நாடு அரசின் அருங்காட்சியகங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், சென்னையிலுள்ள முதன்மை அரசு அருங்காட்சியகத்துடன், **20** மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம்,

கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் மற்றும் விருதுநகரில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் உதகமண்டலத்தில் உள்ள அருங்காட்சியகங்கள் அரசுக்கு சொந்தமான பாரம்பரிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

## 2.5 அறிவிப்புகள் 2018–2019

1. சென்னை அரசு அருங்காட்சியக வளர்கலைக் காட்சிக் கூடத்தின் தரைத் தளத்தில் நிரந்தர கண்காட்சி அரங்கு அமைக்க ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன.

2. சென்னை அரசு அருங்காட்சியக மானிடவியல் பிரிவில் இசைக்கருவிகள் காட்சிக்கூடம் அமைக்க ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன.

3. சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 20 மாவட்ட அருங்காட்சியகங்களில் சிறப்புக் கருத்தியல்

கண்காட்சிகள், கருத்தரங்குகள், விரிவுரைகள், பணிப்பட்டறைகள் போன்ற கல்விப்பணிகள் நடத்திட ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்குறிப்பிட்ட கல்விப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

4. சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு காணொளி, கேட்பொலி செயலியை உருவாக்குவதற்காக, ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவடைந்துள்ளன.

5. தேனி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் புதிய அருங்காட்சியகங்கள் அமைத்திட ரூ.260 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அவை இந்த நிதியாண்டில் நிறைவடையும்.

6. புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் உதகமண்டலம் மாவட்ட அருங்காட்சியகங்களை மேம்படுத்த மத்திய, மாநில அரசு நிதி 80:20 பங்கீட்டு திட்டத்தின் கீழ், ரூ.558 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உதகமண்டலம் அரசு அருங்காட்சியகத்தில் மேம்படுத்துதல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய மூன்று மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை இந்த நிதியாண்டில் நிறைவடையும்.

**புதிய தொல்பொருட்கள் சேகரிப்புகள்**

**2.6** மாநில புதைபொருள் அலுவலராக உள்ள அருங்காட்சியகங்களின் இயக்குநர், புதையல் பொருட்களாகிய தங்கம் மற்றும் வெள்ளி உள்ளிட்ட அணிகலன்கள், நாணயங்கள், படிமங்கள் மற்றும் கற்சிலைகளை கையகப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் வாயிலாக தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறார். **2018–2019** ஆம் நிதியாண்டில், நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், முத்தூர் கிராமத்திலிருந்து, இராமர், சீதை, இலட்சுமணர், அனுமன், விஷ்ணு, தேவி, யோகநரசிம்மர், பாலகிருஷ்ணர், ஸ்ரீநிவாசர் மற்றும் இதர அரும்பொருட்கள் உள்ளிட்ட **23** வெண்கலப் படிமங்கள்; நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், சிக்கார் கிராமத்திலிருந்து **19** உலோகக் கலைப் பொருட்கள்; திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம்,

விக்கிரபாண்டியமிலிருந்து 25 பூஜைப் பாத்திரங்கள் மற்றும் 20 வெண்கலச் சிற்பங்கள்; திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், மஞ்சகுடியிலிருந்து வெண்கலத்தாலான 2 பாவை விளக்குகள்; தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், அஜ்ஜனஹள்ளியிலிருந்து ஒரு காளி மற்றும் உடைந்த ஐந்துதலை நாக வெண்கல சிலைகள்; நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூரிலிருந்து இராஜராஜன் காலத்திய 80 செப்புக் காசுகள்; திருவாரூர் மாவட்டம், ஆனைவடபாதி கிராமத்திலிருந்து 141 தென்னிந்திய தங்க பணங்கள்; ஈரோடு மாவட்டம், சத்திய மங்கலத்திலிருந்து 379 தென்னிந்திய தங்க பணங்கள்; தருமபுரி மாவட்டம் குப்பூரிலிருந்து மொத்தம் 7.1 கிராம் எடையுள்ள 10 தங்கப் பொருட்கள், 368.4 கிராம் எடையுடைய 41 வெள்ளிப்பொருட்கள்; ஈரோடு மாவட்டம் கராலயம் கிராமத்திலிருந்து 1.87 கிராம் எடைகொண்ட தங்கப் பொருட்கள்; 43.99 கிராம் எடை கொண்ட ஒரு வெள்ளிப் பொருள் ஆகியவை புதைபொருட்களாகப் பெறப்பட்டன. மேலும், பல மாவட்டங்களில் பல்வேறு கற்சிலைகள் புதைபொருட்களாக பெறப்பட்டு, சுமார் 784 அரும்பொருட்கள் இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

**தொடர் திட்டப் பணிகள்**

**2.7** சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தினை மேம்படுத்துவதற்காக, ஆசிய வளர்ச்சி வங்கி Tranche IV திட்டத்தின் கீழ், ரூ.11.7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிதியாண்டில் பணிகள் நிறைவடையும்.

இவ்வளர்ச்சிப் பணிகளில், மின்வடங்கள் மற்றும் மழைநீர் வடிகால் வசதிகளை தரைக்கடியில் ஏற்படுத்தி வளாகத்தின் தோற்றப் பொலிவினை மேம்படுத்துதல்; நுழைவாயிலில் பார்வையாளர் கூடும் இடம் அமைத்தல்; முறைபடுத்தப்பட்ட சீருந்து மற்றும் பேருந்து நிறுத்துமிட வசதிகளை ஏற்படுத்துதல்; திறந்தவெளி கலையரங்கினை கட்டுதல்; வளாகத்திலுள்ள நடைபாதைகள் மற்றும் கட்டட முகப்புகளில் பாரம்பரியத் தன்மைக்கேற்ப நவீன விளக்கொளி வசதிகள் ஏற்படுத்துதல்; இவ்வளாகம் முழுவதிலும் புல்வெளிகள் மற்றும் பூங்கா அமைத்து தரைபரப்பை மேம்படுத்துதல்; பார்வையாளர்களின் வசதிக்காக குடிநீர்வசதி, குப்பைக் கூடைகள், மின்னணு கழிவறைகள் அமைத்தல்; தற்போதுள்ள கழிவறைகளை மேம்படுத்துதல்; பாரம்பரிய

சூழலுக்கு ஏற்ப வழிகாட்டு தகவல் பலகைகள் அமைத்தல் மற்றும் ஏனைய பணிகள் அடங்கும்.

**முக்கியத்துவம் வாய்ந்த வகையில் நடத்தப்பட்ட கல்விப்பணிகள்– 2018–2019**

**2.8** அருங்காட்சியகங்களின் முக்கியப் பணிகளில் ஒன்று கல்விப் பணியாகும். தனது சேகரிப்புகள் வழியே பார்வையாளர்களிடையே ஆர்வத்தினை ஏற்படுத்தி அவர்களிடையே கற்றலை ஊக்குவிப்பதே அருங்காட்சியகத்தின் தலையாய நோக்கமாகும். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்காக கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் பல்வேறு பொருண்மைகளில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

**சென்னை அரசு அருங்காட்சியகம்**

- பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்களுக்கு, வரலாறு, தொல்லியல், இயற்கை அறிவியல் தொடர்பாக உள்விளக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. சென்னையின் 16 கல்லூரிகள், புதுதில்லியின் 3 கல்லூரிகள், கேரள மாநிலம் மற்றும் அமெரிக்க நாட்டைச் சார்ந்த கல்லூரிகளிலிருந்து மொத்தம்

407 மாணவர்களுக்கு உள்விளக்கப் பயிற்சி வழங்கப்பட்டது.

- பன்னாட்டு அருங்காட்சியக வார கொண்டாட்டத்தை முன்னிட்டு 2018, மே 19 முதல் 24 வரை காட்சிக்கூட பார்வையிடல் / விளக்கங்கள் மட்டுமின்றி 15 தலைசிறந்த வல்லுநர்களைக் கொண்டு தொடர் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன.

- அருங்காட்சியகத்தின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும், சிறந்த காட்சிப் பொருள்களைக் காட்சிப்படுத்தும் வகையில் அருங்காட்சியக முதன்மைக் கட்டடத்தில், 47 வாராந்திர சிறப்புக் கண்காட்சிகள் நடைபெற்றன. இது பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

- 2018 ஆம் ஆண்டு குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு பல்வேறு வயது வரம்பைச் சார்ந்த பள்ளி மாணவர்களிடையே ஓவியப் போட்டிகள், பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டன. சென்னை மாநகரில் இருந்து 64 பள்ளிகளைச் சார்ந்த 253 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

- **14.12.2018** அன்று 'வனச் சமுதாயமும் மேல் நிலச் சமூகமும்: நீலகிரி மலைப்பகுதி காலனி ஆதிக்கத்திற்கு முந்தைய சூழலியல், பண்பாடு மற்றும் அடையாளங்கள்' என்ற தலைப்பில் சிறப்பு விருந்தினர் சொற்பொழிவு நடத்தப்பட்டது.

- **22.02.2019–**இல் 'பண்டைய இந்தியாவில் மகளிர், ஆற்றல் மற்றும் அதிகாரம்: ஏற்படுத்திய எதிர்மறைகள்' என்ற தலைப்பில் பன்னாட்டு பெண்கள் சங்க அறக்கட்டளை சொற்பொழிவு நடத்தப்பட்டது.

- சென்னை போட்டோ பினாலே (Photo Biennale) என்ற அமைப்பினர், சென்னை அரசு அருங்காட்சியகத்தை இடவசதி பங்காளராகக் கொண்டு, **22.02.2019** முதல் **24.03.2019** வரை, ஒருமாத காலத்திற்கு புகைப்படக் கண்காட்சியினை நடத்தினர்.

- கடந்த ஆண்டில், இயல்–இசை–மியூசியம் என்ற பண்பாட்டு பலகணி நிகழ்ச்சியில், அரிய இசைக் கருவிகள் மற்றும் நடனச் சிற்பங்களைக் கொண்டு சிறப்புக் கண்காட்சி மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் வடிவமைத்து நடத்தப்பட்டதன் தொடர்ச்சியாக,

இவ்வாண்டும் இயல்–இசை–மியூசியம் கலை நிகழ்ச்சிகள், மாபெரும் அளவில், **25.02.2019** அன்று மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் வெவ்வேறு பிரிவுகளின் வேறுபட்ட கலை வடிவங்களை வெளிப்படுத்தும் வகையில் கலை / வரலாறு / பண்பாடு / பாரம்பரியம் தொடர்பான ஆர்வலர்கள் பங்கேற்றனர். சித்தர்கள் மற்றும் ஸூஃபிக்களின் பாடல்கள், பிகேஎஸ் அய்யங்கார் – மனிதனும் நடைமுறைகளும், நம் எண்ணங்கள் மற்றும் நம்பிக்கைகளில் உள்ளார்ந்த பார்வை, ஸ்ரீரங்கம் பஞ்ச கன்யா, சங்க கால வாழ்வியல் – ஒரு நுண்ணோக்கு, சிலம்பம் – மூதாதையர் காலம் முதல் தற்காலம் வரையிலான பயணம், தனித்துவம் வாய்ந்த பெண்கள் – சென்னை மாகாணத்தில் பரங்கியர் பெண்களின் பங்களிப்புகள், அனைவருக்குமான கலை – கல்வி அடைதல் மற்றும் சவால்கள் என்ற தலைப்பில் விவாதம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் வாழ்வும் பங்களிப்பும், இசையின் உள்ளே நாடகத்தின் வாழ்க்கை, கூத்து மற்றும் நகைச்சுவை அரங்க நிகழ்வுகள்,

பிரகத் – தஞ்சாவூரின் கருவூலங்கள், சமுதாய வரலாற்றோடு பின்னிப்பிணைந்த உலகமும் செயல்திறன்களும் உள்ளிட்ட பல்வேறு சொற்பொழிவுகள், செயல்முறை விளக்கங்கள், நிகழ்ச்சிகள் முதலியவை அரங்கேற்றப்பட்டன. பல்வேறு வயது வரம்பைச் சார்ந்த சிறார்கள் மற்றும் பொதுமக்கள் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றதுடன் அருங்காட்சியகத்தினையும் பார்வையிட்டனர்.

**மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்**

பன்னாட்டு அருங்காட்சியக தினம், சுற்றுலா தினம், யோகா தினம், குடியரசு தினம், சுதந்திர தினம், அறிவியல் தினம், குழந்தைகள் தினம், அஞ்சல் தலை தினம் போன்றவை மாவட்ட அருங்காட்சியகங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றன. பலவிதமான போட்டிகள், சிறப்புக் கண்காட்சிகள், பாரம்பரிய நடைபயணம் மற்றும் விழிப்புணர்வு பேரணிகள் நடத்தப்பட்டன.

**முக்கிய சாதனைகள் 2018–2019**

**2.9** தமிழ்நாடு முழுவதுமுள்ள அருங்காட்சியகங்களில் பார்வையாளர்களை அதிகரிக்கும் நோக்கத்தில் எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து **2017–2018**ஆம்

ஆண்டில், 5,82,163 ஆக இருந்த பார்வையாளர்கள் வருகை **2018–2019** ஆம் ஆண்டில், 6,50,409 ஆக உயர்ந்துள்ளது. இதனால் **2017–2018** ஆம் ஆண்டில், ரூ.88,99,097/- ஆக இருந்த நுழைவு கட்டண வருவாய் **2018–2019** ஆம் ஆண்டில், ரூ.98,01,511/- ஆக உயர்ந்துள்ளது. இது ஒரு குறிப்பிடும்படியான 10.14% நுழைவுக் கட்டண வருவாய் வளர்ச்சி ஆகும். இணையவழியில் இலவசமாக, வாசகர்கள் அதிகம் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக உடனிகழ் (online) மின்னணு பதிப்பக முறை (e-publication) மூலம் http://www.e-books-chennaimuseum.tn.gov.in என்ற இணையதள முகவரியில் **264** நூல்களை பிடிஎப் (PDF) வடிவில் இத்துறை பதிவேற்றம் செய்துள்ளது.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள அருங்காட்சியகக் கலையரங்கம் கலை மற்றும் பண்பாடு தொடர்பான நிகழ்ச்சிகளை தொடர்ந்து ஊக்குவிக்கும் வகையில் குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு வாடகை வருவாயான ரூ.**31,45,900/–**த்திலிருந்து **2018–2019**ஆம் ஆண்டு வருவாய் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து, ரூ.**33,59,400/–**ஆக (**6.8**% உயர்வு) வளர்ச்சி அடைந்துள்ளது.

**முடிவுரை**

**2.10** அருங்காட்சியகங்கள் துறையானது, மாற்றத்திற்கான கருவிகளாக உள்ள இன்றைய தொழில் நுட்பங்களையும் அனைத்து வாய்ப்புகளையும் அதிக உத்வேகத்துடன் பயன்படுத்தி பல்வேறு வயது வரம்பைச் சார்ந்த பன்முகத் திறன்கள் மற்றும் பின்புலன்களையுடைய மக்களை இத்துறையின் அன்றாட செயல்பாடுகளில் உள்ளடக்கும் வகையில் செயல்பட உள்ளது. வலைதளம் மற்றும் நேரடியாக பொதுமக்களுடனான தொடர்பை அதிகப்படுத்தி, அவர்களுக்கு வரலாறு மற்றும் பாரம்பரியம் குறித்த கல்வியை அளித்திட இத்துறை திட்டமிட்டுள்ளது.

பொதுமக்கள் அதிக அளவில் பயன்பெறுவதற்கான ஆய்வுகளை வழங்குதல், சேகரிப்புகளை பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் மேம்படுத்துதலை இத்துறை தொடர்ந்து மேற்கொள்ளும். ஏனைய பொதுப் பயன்பாட்டுத் துறைகளைப் போலவே, பார்வையாளர்களிடையே அறிவார்ந்த வளமையான நமது பண்பாடு குறித்து அறியச் செய்வதை இத்துறை தனது முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தொல்லியல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2019 – 2020

**முன்னுரை**

**3.** நம் மூதாதையரின் பண்டைய பண்பாடு மற்றும் சமூகம் குறித்த முழுமையான சித்திரத்தை உருவாக்கும் பொருட்டு, அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களை அடையாளம் கண்டு மீட்கவும், அவற்றை முறைப்படுத்தப்பட்ட பகுப்பாய்வுகளுக்கும், இதர அறிவியல் ஆய்வுகளுக்கும் உட்படுத்தி, விளக்கம் காணும் ஆய்வு சார்ந்த புலம் தொல்லியல் ஆகும்.

**துறையின் நோக்கங்கள்**

**3.1** மாநில தொல்லியல் துறையானது பின்வரும் நோக்கங்களுக்காக **1961–**ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

- பண்டைய மற்றும் வரலாற்று தொன்மை வாய்ந்த சின்னங்களைக் கண்டறிதல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

- மாநிலம் முழுவதும் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் நடத்துதல்.
- கல்வெட்டுகளைப் படியெடுத்தல், படித்து பொருளறிதல், நூலாக்கம் செய்து ஆவணப்படுத்துதல்.
- அகழ்வைப்பகங்களை அமைத்தல்.

**நிர்வாக அமைப்பு**

**3.2** தொல்லியல் துறையானது தொல்லியல் துறை ஆணையரின் தலைமையின் கீழ், துணை இயக்குநர், தொல்லியல் துணை கண்காணிப்பாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர், மண்டல உதவி இயக்குநர்கள், காப்பாட்சியர்கள், கல்வெட்டாய்வாளர்கள், தொல்லியல் அலுவலர்கள், வரலாற்றுக்கு முந்தைய கால அகழாய்வாளர் மற்றும் அகழாய்வாளர் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகின்றது.

**திருப்புமுனையான கண்டுபிடிப்புகள்**

**3.3** மாநில தொல்லியல் துறை அளித்த பரிந்துரையின் பேரில் மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியம், சர்மா

பாரம்பரிய கல்வி மையம் (Sharma Centre for Heritage Education) என்ற சென்னையில் உள்ள ஆய்வு நிறுவனத்திற்கு திருவள்ளூர் மாவட்டம், அத்திரம்பாக்கம் என்ற வரலாற்றுக்கு முந்தைய கால தொல்லியல் தளத்தில் **1999–2004, 2015–2016, 2016–2017** மற்றும் **2017–2018** ஆகிய ஆண்டுகளில் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகளை மேற்கொள்ள அனுமதி அளித்தது. இக்காலகட்டங்களில் மேற்கொண்ட விரிவான கள ஆய்வுகளின் விளைவாக இவ்விடத்தின் கற்களாலான கோடரி காலம் (Acheulian) மற்றும் இடைக்கால பழங்கற்காலம் (Middle Palaeolithic) ஆகிய கடந்த காலங்களின் சூழ்நிலைகளை வெளிக் கொணர்ந்தது.

தொல் பொருள்களை ஔிர்வு முறையில் (Luminescence Dating) ஆய்வு செய்ததில், இந்தியாவில் இருந்ததாக கருதப்பட்ட காலத்திற்கு வெகு முன்னதாகவே இப்பகுதியில் சுமார் **3,85,000** முதல் **1,72,000** ஆண்டுகளுக்கு முன்பு பரிணாமக் காலப் பண்பாடும் (Transitional Culture), இடைக்கால பழங்கற்காலப் பண்பாடும் (Middle Palaeolithic Culture) நிலவியுள்ளன என அண்மையில்

நிரூபிக்கப்பட்டுள்ளன. இத்தகைய திருப்புமுனை ஏற்படுத்திய முடிவுகள், அறிவியல் Science (2011 மார்ச் மாதம்) மற்றும் இயற்கை (Nature) (2018 பிப்ரவரி மாதம்) போன்ற புகழ்பெற்ற இதழ்களில் வெளியிடப்பட்டதன் வாயிலாக வரலாற்றுக்கு முந்தைய பண்பாடு குறித்த உலக வரைபடத்தில் தமிழ்நாட்டை நிலை நிறுத்தின.

**வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்**

**3.4** தமிழ்நாடு அரசு, மாநிலத்திலுள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு **1966** ஆம் ஆண்டு தமிழ்நாடு புராதனச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் மற்றும் **1971** ஆம் ஆண்டு விதிகளை இயற்றியுள்ளது. இச்சட்டம் மற்றும் விதிகளின் கீழ் இது வரையில், சமயம் சார்ந்த மற்றும் சமயஞ்சாரா கட்டடங்கள் உட்பட மொத்தம் **91** பண்டைய மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் “பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாக” அறிவிக்கப்பட்டுள்ளன.

**2017–2018** ஆம் ஆண்டில், விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், சோழவாண்டிபுரம் கிராமத்தில், ஆண்டிமலையில் உள்ள சமணர் சிற்பங்கள், படுக்கைகள்,

கல்வெட்டுகள் ஆகியவை கடைசியாக அறிவிக்கப்பட்டுள்ள "பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாகும்" அது போல், **2018–2019** ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியிலுள்ள கவர்னர் மாளிகையினை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமாக அறிவிப்பதற்கு ஏதுவாக முன்னிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இவை தவிர, "பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக" அறிவிக்கப்படுவதற்காக மேலும் **55** வரலாற்றுச் சின்னங்கள் தொல்லியல் துறையால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கான நிதி**

**3.5** **2018–2019** ஆம் ஆண்டின் போது பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்கு சிறப்பு நிதியாக ரூ.**1** கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. **2018–2019** ஆம் ஆண்டில், **24** வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்புப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அடையாளம் காணப்பட்டு, வேலி அமைத்தல், அறிவிப்பு மற்றும் வழிகாட்டிப் பலகைகள் அமைத்தல் மற்றும் வேதியியல் பாதுகாப்புடன் தூய்மைப்படுத்துதல் போன்ற பணிகள் செம்மையாக முடிக்கப்பட்டுள்ளன.

**ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

**3.6** ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒரு துணைத் திட்டமான, தமிழ்நாடு சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாடு முதலீட்டுத் திட்டம் (IDIPT-TN) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது.

தொல்லியல் துறையின் 12 பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு பணிக்களுக்காக துணைத் திட்டம் IV–இன் கீழ், ரூ. 24 கோடி வழங்குவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. முன்மொழியப்பட்டுள்ள இப்பணிகள் ஜுன் 2020–க்குள் நிறைவேற்றிட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திறன் மேம்பாடு**

**3.7** நாட்டிலேயே முதல்முறையாக, இந்து சமய அறநிலையத் துறையின் பொறியாளர்கள் மற்றும் ஸ்தபதிகள் பயனடையும் பொருட்டு 'புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு' குறித்து ஆறு வாரக் குறுகிய காலப் பயிற்சியையும், செயல் அலுவலர்கள் பயனடையும்

பொருட்டு "புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு" என்னும் இரண்டு வார காலப் பயிற்சியையும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நடத்தியது.

| **வ. எண்.** | **ஆண்டு** | **பயிற்சி** | | **பயிற்சியாளர்கள்** | |
|---|---|---|---|---|---|
| | | ஆறு வாரம் | இரண்டு வாரம் | பொறியாளர்கள் / ஸ்தபதிகள் | செயல் அலுவலர்கள் |
| 1 | 2014–2015 | 2 | --- | 44 | --- |
| 2 | 2015–2016 | 2 | 3 | 40 | 75 |
| 3 | 2016–2017 | --- | 3 | --- | 75 |
| 4 | 2017–2018 | --- | 4 | --- | 164 |
| | **மொத்தம்** | **4** | **10** | **84** | **314** |

இதுவரை, **314** செயல் அலுவலர்கள் மற்றும் **84** பொறியாளர்கள் / ஸ்தபதிகளுக்கு கோயில்களின் கட்டுமானம் மற்றும் ஓவியங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து சிறப்பான திட்டங்களுடன் கூடிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு**

**3.8** பல்கலைக்கழகங்கள், தொல்லியலில் ஆய்வு மேற்கொள்ளும் நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகள் / முகமைகளிடமிருந்து பெறப்படும் அகழாய்விற்கான

செயற்குறிப்புகளை மாநில அரசின் பரிந்துரையுடன், மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கக்கூடிய ஒருங்கிணைப்பு முகமையாக மாநில தொல்லியல் துறை செயல்படுகிறது.

இணைப்பில் உள்ளபடி, இதுவரை தொல்லியல் துறை மட்டும் 40 வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களில் அகழாய்வுப் பணிகள் மேற்கொண்டுள்ளது. அவற்றுள் 36 இடங்களின் அகழாய்வு அறிக்கைகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

**கீழடி அகழாய்வு (2017–2018)**

**3.9** சிவகங்கை மாவட்டம், திருபுவனம் வட்டத்தில் கீழடி கிராமத்தில் அமைந்துள்ள தென்னந்தோப்பில் 110 ஏக்கருக்கும் அதிகமான அளவில், விரிந்த நிலப்பரப்பில், பண்பாட்டு குவியல்களைக் கொண்ட மண் மேடு அமைந்துள்ளது.

முன்னதாக, இந்திய தொல்லியல் துறையின் பெங்கÙ¼ அகழாய்வுப் பிரிவின் வாயிலாக 2014–2015, 2015–2016 மற்றும் 2016–2017 ஆகிய ஆண்டுகளில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, இத்தொல்லியல்

தளத்தில் மறைந்துள்ள மதிப்புறுப் பொருட்கள் மற்றும் தொல்லியல் சின்னங்களை வெளிக்கொணரும் பொருட்டு, மாநில தொல்லியல் துறையானது மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் அனுமதி பெற்று அகழாய்வு மேற்கொண்டு வருகின்றது. **2017–18** ஆம் ஆண்டிற்கான அகழாய்வுŠ பணிகள் ரூ.**55** இலட்சம் செலவில் **2018** ஆம் ஆண்டு ஏப்ரல் – செப்டம்பர் காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன.

## கீழடி அகழாய்வு – முக்கிய கண்டுபிடிப்புகள்

**3.10** இக்காலகட்டத்தில் நடைபெற்ற அகழாய்வில் அரிய பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட ஏராளமான கட்டுமானப் பொருட்கள் (செங்கல் கட்டுமானம், சுடுமண்ணாலான உறை கிணறுகள் மற்றும் விரல்களால் மிக அழுத்தி உருவாக்கப்பட்ட பள்ளங்கள் வழியாக மழை நீர் செல்லும் வகையில் தயாரிக்கப்பட்ட கூரை ஓடுகள் விழுந்த நிலையில்) உள்ளிட்ட **5,820** தொல்பொருட்கள் வெளி,கொணரப்பட்டுள்ளன.

மேலும், தங்கத்தினால் ஆன சில ஆபரண பாகங்கள், செம்பிலான தொல்பொருட்கள், இரும்புக் கருவிகள்,

சுடுமண்ணாலான விளையாட்டுப் பொருட்கள் (சதுரங்கப் பொருட்கள்), வட்டச் சில்லுகள், காதணிகள், தக்களிகள், மனிதன் மற்றும் விலங்குகளின் உடைந்த மற்றும் முழு பொம்மை உருவங்கள் மற்றும் சுடுமண் மணிகள், கண்ணாடி மணிகள், மதிப்பு குறைவான கல் மணிகள் [இரத்தினக் கல் மணிகள் (அகேட்), சூது பவள மணிகள் (கார்னீலியன்), படிக மணிகள்] மற்றும் தொன்மை வாய்ந்த மட்பாண்ட வகைகளின் எச்சங்களான கருப்பு சிவப்பு பானை ஓடுகள், கருப்பு நிறப் பானை ஓடுகள், மெருகூட்டப்பட்ட கருப்பு பானை ஓடுகள், சிவப்பு நிறப் பானை ஓடுகள், ரோமானிய முத்திரையிட்ட பானை ஓடுகள், அரிட்டேன் பானை ஓட்டுத் துண்டுகள் ஆகியவையும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பானைகளைச் சுடுவதற்கு முன்னரும் மற்றும் சுட்ட பின்னரும் வரையப்பட்ட கீரல் குறியீடுகளைக் கொண்ட பானை ஓடுகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் கண்டெடுக்கப்பட்டன. மேலும், தமிழ் பிராமி எழுத்து பொறிப்பு கொண்ட பானை ஓடுகள் நிறைய எண்ணிக்கையில் கிடைத்துள்ளன.

இது கோயில் நகரமான மதுரைக்கு மிக அருகிலுள்ள பகுதியாகும். இங்கு வரலாற்றுத் தொன்மை கொண்ட

பொருட்கள் கிடைக்கப்பெற்றதன் மூலம், பண்டைய தமிழர் நாகரிகத்தின் பண்பாட்டு வளம் சுட்டிக் காட்டப்படுவதால் கீழடியில் மறைந்துள்ள பண்பாட்டு மதிப்புறுப் பொருட்களை தேடும் பணிகளை எதிர்காலத்தில் தொடர்வதும், பண்டைய சமூகத்தின் பண்பாட்டு வளங்களை வெளிப்படுத்துவதும் காலத்தின் அவசியத் தேவையாகிறது.

**அறிவியல் கால அளவீடு**

**3.11** தொல்லியல் பொருள்களின் கால வரிசையை சரியாக மறு கட்டமைப்பு செய்திடவில்லையெனில் தொல்லியல் ஆய்வுகள் பொருள் அற்றதாகி விடும்.

வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் வரலாற்றுக் காலம் வரையிலான பண்பாட்டினைக் கூறும் உலக வரைபடத்தில் தமிழ்நாட்டின் இடத்தினை நிலை நிறுத்துவதற்கு அகழாய்வுகள் மூலம் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்களை அவ்வப்போது அறிவியல் நெறிமுறைகளின்படி பகுப்பாய்வு செய்து காலக் கணக்கீடுகள் செய்திடல் அவசியம். இதனையொட்டி, தொல்லியல் துறை அழகன்குளம் மற்றும் கீழடி அகழாய்வுகள் மூலம் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட்களில் சிலவற்றினை

அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள புளோரிடா மாகாணம், மியாமி நகரத்திலுள்ள, 'பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகம்' (Beta Analytic Testing Laboratory) என்ற ஆய்வுக் கூடத்தில் கால அளவீடு செய்து அறிக்கை பெற்றுள்ளது.

| வ. எண். | அகழாய்வு இடம் | காலக் கணக்கீடு முடிவுகள் |
|---|---|---|
| 1 | கீழடி<br>(6 மாதிரிகள்) | பொ.ஆ.மு. 6–ஆம் நூற்றாண்டு முதல்<br>பொ.ஆ. 3–ஆம் நூற்றாண்டு வரை |
| 2 | அழகன்குளம்<br>(4 மாதிரிகள்) | பொ.ஆ.மு. 4–ஆம் நூற்றாண்டு முதல்<br>பொ.ஆ. 1–ஆம் நூற்றாண்டு வரை |

**பட்டறைப்பெரும்புதூர் அகழாய்வு (2017–2018)**

**3.12** திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டத்தில் திருவள்ளூரிலிருந்து 12 கி.மீ. தொலைவில் பட்டறைப்பெரும்புதூர் எனும் சிற்றூர் அமைந்துள்ளது. இங்கு ரூ.20 இலட்சம் செலவில் 2017–2018 Ýம் ஆண்டிற்கான

அகழாய்வுப் பணிகள் 2018 ஆம் ஆண்டு மே – செப்டம்பர் மாதங்களில் நடைபெற்றன.

பல்வேறு காலங்களைச் சார்ந்த 1,201 தொல்பொருட்கள் இவ்வகழாய்வில் கிடைக்கப்பெற்றன. கற்கருவிகள், செம்பினாலான பொருட்கள், இரும்பு பொருட்கள், கண்ணாடி மணிகள், கண்ணாடி வளையல்கள், எலும்பினாலான முனைகள், எலும்பு மணிகள், பிசின் மணிகள், மதிப்பு குறைவான கல் மணிகள், சங்கு வளையல் துண்டுகள், தந்தத்திலானப் பொருட்கள், சுடுமண் பொருட்கள் போன்றவை இத்தளத்தில் கிடைத்த தொல்பொருட்களில் அடங்கும்.

தொன்மைச் சின்னங்கள், மட்பாண்டச் சேகரிப்புகள், வரிசையாக அமைக்கப்பட்ட செங்கல் கட்டுமானங்கள் ஆகியவை இப்பகுதியின் முக்கியத்துவத்தை நிரூபிக்கின்றன. அகழாய்வில் கிடைத்த ஆபரணங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், பல்வேறு பயன்பாட்டுக்கான மட்பாண்டங்கள் மற்றும் ஏனைய சிறிய தொல்பொருட்கள் இப்பகுதியின் குடியிருப்பு அமைப்பினை படம் பிடித்துக் காட்டுகின்றன. இக்கண்டுபிடிப்புகளின் மூலமே இப்பகுதியில் வாழ்ந்த பண்டைய தமிழர் வாழ்க்கையின் வளமிக்க பொருளாதார,

கலை, பண்பாடு, கல்வியறிவு மற்றும் சமுகம் குறித்து நன்கு அறிந்திட முடியும்.

## அகழாய்வில் தொழில்நுட்பப் பயன்பாடு

**3.13** அகழாய்வுகளை மேற்கொள்வதற்கு கண்டறிதல் முதல் பொருள் விளக்கம் அறிதல் வரை பல்வேறு தொழில்நுட்பத் திறன்கள் தேவையாக உள்ளது. கடந்த காலம் குறித்த சிந்தனைகளில் புதுமை வழிகளை ஆராய்வதும், தகவல்களைச் சேகரிப்பதும், அறிவை அதிகரிப்பதும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதும் அறிவின் அடித்தளத்தை விரிவாக்கி பண்டைய காலம் பற்றிய புரிதலை மேம்படுத்தி ஒவ்வொருவரின் ஆர்வத்தையும் கற்பனையையும் தன் வசப்படுத்தும்.

இப்பெரு முயற்சியில், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் தொலை உணர்வு துறை, அண்ணா பல்கலைக் கழகத்தின் தொலை உணர்வு நிறுவனம் மற்றும் மும்பையிலுள்ள இந்திய புவிகாந்தவியல் நிறுவனம் போன்ற புகழ் பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து, தரை ஊடுருவல் தொலையுணர்வி மதிப்பாய்வு (Ground Penetrating Radar),

காந்த அளவி மதிப்பாய்வு (Magnetometer Survey), ஆளில்லா வான்வழி வாகனம் மதிப்பாய்வு (Unmanned Aerial Vehicle) போன்ற பல்வகையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அவற்றின் மூலம் தொல்லியல் இடத்தை அடையாளம் காண்பது மற்றும் முறையான தொல்லியல் தளங்கள் மற்றும் அகழாய்வுŠ பணிகள் மேற்கொள்வது என சீரிய நடவடிக்கைகளில் தொல்லியல் துறை ஈடுபட்டுள்ளது.

**தொல்லியல் அகழ்வைப்பகங்கள்**

**3.14** கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளில் கிடைக்கும் அரிய தொல்பொருட்கள் பாதுகாக்கப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், இத்துறையின் கீழ் செயல்படும் H¡õ¼‹ 14 அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

| வ.எண் | அகழ்வைப்பகங்கள் | இடம் / மாவட்டம் |
|---|---|---|
| 1) | தேனிசு கோட்டை அகழ்வைப்பகம் | தரங்கம்பாடி / நாகப்பட்டினம் |
| 2) | ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம் | பூம்புகார் / நாகப்பட்டினம் |
| 3) | கங்கைகொண்டசோழபுரம் | கங்கைகொண்ட |

| | | |
|---|---|---|
| | அகழ்வைப்பகம் | சோழபுரம் / அரியலூர் |
| 4) | இராமலிங்க விலாசம் அகழ்வைப்பகம் | இராமநாதபுரம் / இராமநாதபுரம் |
| 5) | ஆற்காடு அகழ்வைப்பகம் | ஆற்காடு / வேலூர் |
| 6) | வரலாற்றுக்கு முந்தைய கால அகழ்வைப்பகம் | பூண்டி / திருவள்ளூர் |
| 7) | திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் | மதுரை / மதுரை |
| 8) | இராசராசன் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 9) | மராத்தியர் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 10) | கரூர் அகழ்வைப்பகம் | கரூர் / கரூர் |
| 11) | கோயம்புத்தூர் அகழ்வைப்பகம் | கோயம்புத்தூர் / கோயம்புத்தூர் |
| 12) | குற்றாலம் அகழ்வைப்பகம் | குற்றாலம் / திருநெல்வேலி |
| 13) | திருக்கோவிலூர் அகழ்வைப்பகம் | திருக்கோவிலூர் / விழுப்புரம் |
| 14) | தருமபுரி அகழ்வைப்பகம் | தருமபுரி / தருமபுரி |

**அகழ்வைப்பகங்கள் மேம்பாட்டு நிதி**

**3.15 2018–2019** ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளின் கீழ், அகழ்வைப்பகங்களின் மேம்பாட்டிற்கும் சிறப்பு நூலகம்

அமைக்கவும் ரூ.20 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், பயிற்சிகள், பயிற்சிப்பட்டறைகள் நடத்திட நிதி**

**3.16 2018–2019** ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளின் கீழ், உலக மரபு நாள் (ஏப்ரல் 18) மற்றும் உலக மரபு வாரம் (நவம்பர் 19 – 25) ஆகிய விழாக்களை கொண்டாடவும், தொல்லியல் மற்றும் கல்வெட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சிப் பட்டறைகள், போட்டிகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், பயிற்சிகள் போன்ற நிகழ்ச்சிகளை அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர் சமுதாயம் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நடத்திட ஆண்டுதோறும் ரூ. 15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இது தொடர்பாக ஆற்காடு மற்றும் சிவகங்கையில் இரண்டு பயிற்சிப் பட்டறைகள் செம்மையாக நடத்தப்பட்டன.

**கல்வெட்டியல்**

**3.17** கல்வெட்டுகளைப் படியெடுத்து, பொருள் கண்டுணர்ந்து படித்து, தொகுத்து மற்றும் பதிப்பித்து நூலாக வெளியிடும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக

தொல்லியல் துறை மேற்கொண்டு வருகின்றது. தற்போது, மொத்தம் உள்ள 32 மாவட்டங்களில் 29 மாவட்டங்களில் உள்ள 24,771 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு அவற்றின் பிரதிகள் இத்துறையிடம் உள்ளன. ஏனைய மாவட்டங்களான புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 14,200 கல்வெட்டுகள், துறை கல்வெட்டாய்வாளர்களால் பொருள் கண்டுணர்ந்து படிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 7,320 கல்வெட்டு பொறிப்புகள் 50 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

தொல்லியல் துறையின் தலைமையகத்தில், 1974 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் 'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் ஓராண்டு முதுநிலைப் பட்டய படிப்பை நடத்தி வருகிறது. இங்கு ஒவ்வோர் ஆண்டும், முதுகலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, 242 மாணவர்கள் இப்படிப்பினை நிறைவு செய்துள்ளனர். ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/– பயிற்சிக்கால உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

**2018–2019** ஆம் ஆண்டு ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.**2,000/–** என்ற பயிற்சிக்கால உதவித் தொகையானது ரூ.**4,000/–**ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட பயிற்சிக்கால உதவித் தொகையானது கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு, ஆகஸ்ட் **2018** முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்திற்கு திறன்மிகு வகுப்பறை (Smart Class) அமைத்தல்**

**3.18 2018–2019** ஆம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்திற்கு திறன்மிகு வகுப்பறை (Smart Class) அமைத்திட ரூ.**9** இலட்சம் நிதி வழங்கப்பட்டு, இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

**வெளியீடுகள்**

**3.19** துறையின் நவீனமயமாக்கப்பட்ட அச்சுப் பிரிவின் வாயிலாக, கல்வெட்டுகள், வரலாற்றுச் சின்னங்கள், அகழாய்வு அறிக்கைகள், மாவட்டத் தொல்லியல் கையேடுகள், அகழ்வைப்பகக் கையேடுகள் மற்றும் கோயில் ஆய்வு நூல்கள் ஆகியவை தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டு

வருகின்றன. இத்துறை, இதுவரை 301 நூல்களை வெளியிட்டுள்ளது. “கல்வெட்டு” என்ற காலாண்டு இதழும் வெளியிடப்பட்டு வருகிறது. இதுவரை 104 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. துறையின் 250 வெளியீடுகள் www.tnarch.gov.in எனும் இத்துறையின் வலைதளத்தில் காணக்கிடைக்கின்றன.

## அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

3.20 அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம், 1869 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. தற்போது சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்நூலகத்தில் கணிதம், வான் அறிவியல், சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகளில் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அரபு மற்றும் பாரசீக மொழிகளில் 72,748 அரிய கையெழுத்துப் படிகள் மற்றும் ஓலைச் சுவடிகள் மற்றும் 25,373 மேற்கோள் நூல்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை, **2400** ஓலைச்சுவடி கட்டுகளின் **3,00,000** மின்னனுமயமாக்கப்பட்ட பக்கங்கள் www.tnarch.gov.in எனும் தொல்லியல் துறையின் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. வலைதளத்தில் உள்ள இத்தகவல்கள் உலகில் உள்ள அனைத்து ஆய்வறிஞர்கள் மற்றும் இதர வாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.

**சுவடிகள் வள ஆதார மையம் (Manuscripts Resource Centre)**

3.21 புதுதில்லியிலுள்ள மத்திய பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய சுவடிக் குழுமம் [National Mission for Manuscripts (NMM)] இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச்சுவடிகளின் விவரங்களை திரட்டத் திட்டமிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள ஓலைச்சுவடிகளைச் சேகரித்து, அவற்றினை குறுந்தகடுகளில் மின்னணு வடிவில் பதிவு செய்யும் பணிக்காக, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை, தமிழகத்தின் சுவடிகள் வள ஆதார மையமாக (MRC) அங்கீகரித்துள்ளது. இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை **66,110** சுவடிகள் மின்னணு முறையில் பதிவு செய்யப்பட்டு, புதுதில்லியிலுள்ள தேசிய சுவடிகள் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த செய்முறையில் பண்டைய தமிழர்களின் பண்பாடு மற்றும் வான் அறிவியல் போன்ற விவரங்கள் ஆவணப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்படுகின்றன.

**சுவடிகள் பாதுகாப்பு மையம் (Manuscripts Conservation Centre)**

**3.22** புதுதில்லியிலுள்ள மத்திய பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய சுவடிக் குழுமம் [National Mission for Manuscripts (NMM)] சென்னையில் உள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் சுவடிகள் பாதுகாப்பு மையம் (Manuscripts Conservation Centre) தொடங்கிட அனுமதி வழங்கியுள்ளது. இதன் தொடர்பாக, **01.04.2018** முதல் **31.03.2020** வரையிலான இரண்டு ஆண்டு காலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.23 முக்கியச் செயல்பாடுகள் – 2018–2019**

- 2018–2019 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் அகழ்வைப்பகங்களில் தீயணைப்புக் கருவிகள் பொருத்துவதற்கு ரூ.6.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 85 தீயணைப்புக் கருவிகள் ரூ.4.77 இலட்சம் மதிப்பில் பொருத்தப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

- 2018–2019 ஆம் ஆண்டு, பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களில் காவல் பணிகளுக்காக உள்ள பகுதிநேர காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊதியம் ரூ.5,000/– நிலை ஊதியமாக உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் 22 பகுதி நேர காவலர்களை சின்னங்கள் பாதுகாவலர்களாக பணி நியமனம் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/– நிலை ஊதியம் வழங்கிட ஆணை வழங்கப்பட்டது.

- வேலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ‘கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்’ பயிற்சி தலா ரூ.5 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது. இப்பயிற்சி ஒவ்வொன்றிலும் கல்லூரி விரிவுரையாளர்கள்,

கல்வெட்டு மற்றும் தொல்லியல் ஆய்வாளர்கள், மாணவர்கள் என 40 நபர்கள் கலந்து கொண்டனர்.

- ❖ 2018 ஆம் ஆண்டுக்கான உலக மரபு வார விழா 2018 ஆம் ஆண்டு நவம்பர் 19 முதல் 25 வரை கொண்டாடப்பட்டது. அனைத்து அகழ்வைப்பகங்களிலும் கோயில்களின் முக்கியத்துவம் மற்றும் வரலாற்றுச் சின்னங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் குறித்து பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வின் வாயிலாக 16,119 பார்வையாளர்கள் பயனடைந்தனர்.

- ❖ தொல்லியல் துறைக்கென ஒரு தொலைநோக்குப் பார்வையினை ஏற்படுத்தும் பொருட்டு ஒரு சிறப்பு கருத்துப்பரிமாற்றக் கூட்டம் 08.01.2019 முதல் 10.01.2019 வரை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஒரு திட்ட வரைவு வடிவமைத்திட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுள்ள 50 ஆய்வறிஞர்கள், அவர்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் பெறுவதற்காக அழைக்கப்பட்டனர். இந்த கூட்டத் தொடர் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

❖ தொல்லியல் துறை, ‘‘சோழர்கால சமுதாய நோக்கில் பெண்ணியம்’’, ‘‘தொல்லியல் நோக்கில் தாய்த் தெய்வ வழிபாடு’’, ‘‘ஓலைச் சுவடிகள்’’, ‘‘பண்டைத் தமிழரின் போரும் போர்த் தொழில் நுட்பமும்’’, ‘‘நாயக்கர் கால ஆவணங்கள்’’, ‘‘தமிழகச் செப்பேடுகள்’’, ‘‘அர்ச்சுன தவம்’’, ‘‘மீள் பார்வை : முசிறி பட்டினம் / முசிறிகள் தமிழகத்தின் பண்டைய கடற்கரை நகரம்’’ **(கிமு 300 – கிபி 500),** ‘‘நமது பண்பாட்டினைப் பாதுகாப்பதில் அருங்காட்சியகத்தின் பங்கு : இந்திய தொல்லியல் அகழ்வைப்பகங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி – சிறப்புப் பார்வை’’, ‘‘தென்னிந்தியாவின் பண்டைய வேளாண்மை கால்நடைச் சமூகம்’’, ‘‘தமிழக வரலாற்றில் கோட்டைகளின் முக்கியத்துவம்’’, ‘‘பழந்தமிழகத்தில் கைத்தொழில் உற்பத்தி முனையங்கள்’’ ஆகிய பல்வேறு தலைப்புகளில் மாதாந்திர சொற்பொழிவுகளை நடத்தியது. இச்சொற்பொழிவுகளில் வரலாற்றுத் துறை சார்ந்த அறிஞர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மரபு சார் ஆர்வலர்கள் குறிப்பிடத்தக்க வகையில் கலந்து கொண்டார்கள்.

❖ **2018–2019** ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள கோயில்கள், மலைகள் போன்ற இடங்களில் காணப்படும் **50** கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.

**தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம்**

**3.24 2017–2018** ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் மூன்று திட்டங்களுக்கு ரூ.47 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் தமிழ்நாட்டு கல்வெட்டுகள் தொகுதி XIII மற்றும் மாணவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து ஆய்வேடுகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இதர, இரண்டு திட்டங்களான மெய்நிகர் அருங்காட்சியகம் அமைத்தல் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், இராசராசன் அகழ்வைப்பகத்தில் நவீன தரை வரைபடக் காட்சி அமைத்தல் ஆகிய திட்டங்கள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

**பன்முக அணுகுமுறை**

**3.25** தனிச் சிறப்பான பிரிவுகளின் மதிப்பு வாய்ந்த பங்களிப்பினை ஆழமாக பகுத்தாய்ந்து தொல்லியல் கண்டுப்பிடிப்புகளை அங்கீகரிக்கும் வகையில்

தொல்–தாவரவியல், மூலக்கூறு உயிரியல், மக்கள் மரபியல், சுற்றுச்சூழல் தொல்லியல் மற்றும் மொழியியல் தொல்லியல் போன்ற துறைகளின் வல்லுநர்களுடன் இணைந்து ஒத்துழைத்து பணியாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

**3.26** தொல்லியல் மற்றும் நமது மரபு குறித்தான ஆர்வம் தமிழ்நாட்டில் தற்போது புத்தாக்கம் பெற்றுள்ளது. எனவே, கடந்த காலத்தைப் பற்றி கற்கவும், கண்டறியவும் அக்கறை கொள்ளவும் நமது பன்முகம் கொண்ட வளமையான பாரம்பரியத்தை உலகிற்கு அறியச் செய்யவும் அளப்பரிய வாய்ப்புகள் உள்ளன என்றும், அதன் மூலம் நமது மேன்மைக்கும் அறிவுக்கும் வளம் சேர்த்து இறுதியாக தமிழ்நாட்டின் வரலாற்றை உலக அரங்கில் நிலைநிறுத்தும் என்றும் கூறலாம்.

உலகில் உள்ள புகழ்பெற்ற நிறுவனங்களுடன் பன்முக அணுகுமுறை வாயிலாக அகழாய்வுப் பணிகளை தமிழ்நாடு தொல்லியல் துறை மேற்கொள்ளும். தற்போது நடைபெற்று வரும் களப்பணிகளான பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களைப் பராமரித்தல், உள்ளூர் தொல்லியல் ஆய்வு மற்றும் அகழாய்வுப் பணிகள் மேம்பாடு, அகழ்வைப்பகம்

நிறுவுதல், கல்வெட்டுகளைப் படியெடுத்தல் மற்றும் பொருளுணர்தல் போன்ற ஆய்வுப் பணிகளுக்கு சிறப்பு கவனம் அளிக்கப்படும். இவ்வகையான தொல்லியல் நடைமுறைகள் மூலம் உலகத் தரத்திலான மரபு சார் மேலாண்மையினை தமிழ்நாட்டில் மேம்படுத்துவதற்கான முன்னெடுப்பு நிகழும் என எதிர்நோக்குகிறோம்.

**க.பாண்டியராஜன்**


தமிழ் ஆட்சிமொழி மற்றும்
தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர்

# இணைப்பு

| வ. எண் | இடம் | மாவட்டம் | அகழாய்வு மேற் கொள்ளப் பட்ட ஆண்டு | இடத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 1 | கொற்கை | தூத்துக்குடி | 1968–1969 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 2 | பாஞ்சாலங் குறிச்சி | தூத்துக்குடி | 1968–1969 | நவீன காலம் |
| 3 | வசவ சமுத்திரம் | காஞ்சிபுரம் | 1969–1970 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 4 | ஆனைமலை | கோயம்புத்தூர் | 1969–1970 | பெருங்கற்காலம் |
| 5 | பல்லவமேடு | காஞ்சிபுரம் | 1970–1971 | இடைக் காலம் |
| 6 | கரூர் | கரூர் | 1973–1974<br>1994–1995 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 7 | பனையகுளம் | தருமபுரி | 1979–1980 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 8 | போளுவாம் பட்டி | கோயம்புத்தூர் | 1979–1980<br>1980–1981 | இடைக் காலம் |
| 9 | கோவலன் பொட்டல் | மதுரை | 1980–1981 | பெருங்கற்காலம் |
| 10 | தொண்டி | இராமநாதபுரம் | 1980–1981 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 11 | கங்கை கொண்ட சோழபுரம் | அரியலூர் | 1980–1981<br>1986–1987<br>2008–2009 | இடைக் காலம் |
| 12 | கண்ணனூர் | திருச்சிராப்பள்ளி | 1982–1983 | இடைக் காலம் |
| 13 | குறும்பன்மேடு | தஞ்சாவூர் | 1984–1985 | இடைக் காலம் |
| 14 | பழையாறை | தஞ்சாவூர் | 1984–1985 | இடைக் காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | அழகன்குளம் | இராமநாதபுரம் | 1986–1987<br>1990–1991<br>1992–1993<br>1994–1995<br>1996–1997<br>2014–2015<br>2016–2017 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 16 | திருக் கோயிலூர் | விழுப்புரம் | 1992–1993 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 17 | கொடுமணல் | ஈரோடு | 1992–1993<br>1996–1997 | பெருங்கற்காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்க காலம் |
| 18 | சேந்தமங்கலம் | விழுப்புரம் | 1992–1993<br>1994–1995 | இடைக் காலம் |
| 19 | படவேடு | திருவண்ணாமலை | 1992–1993 | இடைக் காலம் |
| 20 | திருத்தங்கல் | விருதுநகர் | 1994–1995 | நுண்கற்காலம் |
| 21 | பூம்புகார் | நாகப்பட்டினம் | 1994–1995<br>1997–1998 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 22 | மாளிகைமேடு | கடலூர் | 1999–2000 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 23 | தேரிருவேலி | இராமநாதபுரம் | 1999–2000 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 24 | மாங்குடி | திருநெல்வேலி | 2001–2002 | நுண்கற்காலம் |
| 25 | பேரூர் | கோயம்புத்தூர் | 2001–2002 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 26 | ஆண்டிபட்டி | திருவண்ணாமலை | 2004–2005 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 27 | மோதூர் | தருமபுரி | 2004–2005 | புதியகற்காலம் |
| 28 | மரக்காணம் | விழுப்புரம் | 2005–2006 | இடைக் காலம் |
| 29 | பரிக்குளம் | திருவள்ளூர் | 2005–2006 | பழைய கற்காலம் |
| 30 | நெடுங்கூர் | கரூர் | 2006–2007 | பெருங்கற்காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | மாங்குளம் | மதுரை | 2006–2007 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 32 | செம்பியன் கண்டியூர் | நாகப்பட்டினம் | 2007–2008 | பெருங்கற்காலம் |
| 33 | தரங்கம்பாடி | நாகப்பட்டினம் | 2008–2009 | நவீன காலம் |
| 34 | இராஜாக்கள் மங்கலம் | திருநெல்வேலி | 2009–2010 | இடைக் காலம் |
| 35 | தலைச்சங்காடு | நாகப்பட்டினம் | 2010–2011 | இடைக் காலம் |
| 36 | ஆலம்பரை | காஞ்சிபுரம் | 2011–2012 | நவீன காலம் |
| 37 | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி | 2013–2014<br>2014–2015 | இடைக் காலம் |
| 38 | உக்கிரன் கோட்டை | திருநெல்வேலி | 2014–2015 | இடைக் காலம் |
| 39 | பட்டறை பெரும்புதூர் | திருவள்ளூர் | 2015–2016<br>2017–2018 | கடைக் கற்காலம் |
| 40 | கீழடி | சிவகங்கை | 2017–2018 | வரலாற்றுத் தொடக்க காலம் |




**தொல்லியல் துறையால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள்**

# புகைப்படங்கள்




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் **23.02.2019** அன்று சென்னையில் நடைபெற்ற “ஜெயம் **2019**” நிறுவனர் தினவிழாவில் நிகழ்ச்சி வழங்கிய கலைஞர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்கள்.

II





சென்னை தீவுத்திடலில் **09.01.2019** அன்று "**45**வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி–**2019**" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைத்த விழாவில் கலை பண்பாட்டுத்துறை சார்பில் நடத்தப்பட்ட கிராமியக் கலை நிகழ்ச்சிகள்.




“யுனெஸ்கோ” அமைப்பால் சென்னை படைப்பாக்க இசைநகரமாக அங்கீகாரம் பெற்றதை கொண்டாடும் விதமாக “சென்னையில் இசைவிழா”அரசு அருங்காட்சியகக் கலையரங்கத்தில் **21.06.2019** அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் சென்னையில் **13.02.2019** அன்று நடைபெற்ற மாவட்டக் கலைவிருதுகள் வழங்கும் விழாவில் சென்னை மாவட்டக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கினார்கள்.



திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூரில் **16.06.2018** அன்று நடைபெற்ற கோடை விழாவின் தொடக்கவிழாவில் திருவண்ணாமலை மாவட்டக் கலைஞர்களுக்கு “மாவட்டக் கலை விருதுகள்” வழங்கப்பட்டன.



மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் “மாநில அளவிலான மரபு ஓவிய சிற்பக் கலைக்காட்சி” யினை மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் **05.03.2019** அன்று தொடங்கி வைத்தார்கள்.




மலேசியா, பத்துமலை ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் **31.08.2018** அன்று நடைபெற்ற குடமுழுக்கு விழாவில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் நிகழ்த்தப்பட்ட கிராமிய கலை நிகழ்ச்சிகள்




உத்திரபிரதேச மாநிலம், பிரயாக்ராஜ் நகரில் நடைபெற்ற “கும்பமேளா மகாஉத்சவ்” விழாவில் **28.02.2019** முதல் **02.03.2019** வரை கலை பண்பாட்டுத் துறை சார்பில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.




திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் **15.12.2018** அன்று நடத்தப்பட்ட ‘‘மார்கழி இசைவிழா’’ கலை நிகழ்ச்சிகள்.

X



ஆந்திர மாநிலம், திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் நடத்தப்பட்ட பிரம்மோத்சவ விழாவில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் **16.09.2018** மற்றும் **17.09.2018** ஆகிய இரண்டு நாட்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.





கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் **25.08.2018** மற்றும் **26.08.2018** ஆகிய நாட்களில் நடத்தப்பட்ட "கோவை கலைத் திருவிழா"வில் நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்.




நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் **13.10.2018** அன்று நடைபெற்ற "வானவில் கலை விழா" வில் நடத்தப்பட்ட நாட்டிய நாடகம்



சென்னையில் **13.02.2019** அன்று நடத்தப்பட்ட “மண்ணின் கலை விழாவில்” நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்




மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் "இயல் இசை மியூசியம் – 2019" ஐ **25.02.2019** அன்று துவக்கி வைத்தார்கள். அது தொடர்பாக **25.02.2019** மற்றும் **26.02.2019**ல் நிகழ்த்தப்பட்ட கலைநிகழ்ச்சிகள்



சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்ட கல்லூரி மாணவிகளுக்கான புதையுயிரி படிவங்கள் தொடர்பான சிறப்பு உள்விளக்கப் பயிற்சியின் ஒரு பகுதி




சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 2018–2019 ஆம் ஆண்டில் சேமிப்பிலிருந்து காட்சிப்படுத்தப்பட்ட 47 சிறப்பு வாரக் கண்காட்சியில் ஒன்றாக காட்சிப்படுத்தப்பட்ட காட்சிப்பொருள்




சென்னை அரசு அருங்காட்சியகத்தில் புதியதாக வடிவமைக்கப்பட்ட முந்து வரலாறு காட்சிக் கூடம்



சென்னை அரசு அருங்காட்சியக வளர்கலைக் கூடத்தின் தரைத் தளத்தில் புதியதாக அமைக்கப்பட்ட நிலையான கண்காட்சி அரங்கு




தமிழ் நாடு புதுமை முயற்சிகள் திட்டம் 2018–2019ன் கீழ் செயல்படுத்தப்பட்ட தரை ஒளிக் குவியம், தொடு திரை, முப்பரிமான நேர் நிகர் காட்சியமைப்புகளின் ஒரு பகுதி



முத்தூர், சிக்கார், மஞ்சக்குடி, திருக்கடையூர் மற்றும் சத்தியமங்கலத்திலிருந்து **2018–2019** ஆம் ஆண்டில் பெறப்பட்ட புதையல் பொருட்கள்



சிவகங்கை மாவட்டம், கீழடியில் அமைக்கப்பட்ட அகழாய்வுக் குழிகளின் வான்வழிப் பார்வை மற்றும் அகழாய்வில் வெளிப்பட்ட உறை கிணறு, உலைகலன் மற்றும் மட்பாண்டங்கள்



அகழாய்வுக் குழியில் வெளிப்பட்ட சிதறிக் கிடக்கும் விலங்கின் எலும்புத் துண்டுகள் – கீழடி, சிவகங்கை மாவட்டம்



திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப் பெரும்புதூர் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட செங்கற்களால் ஆன கிணறு (சங்க காலம்), உறை கிணறு மற்றும் கூம்பு வடிவ தனித்தன்மை வாய்ந்த மட்பாண்டங்கள்



இந்து சமய அறநிலையங்கள் துறையின் **164** செயல் அலுவலர்கள் பயனடையும் பொருட்டு ‘‘புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு’’ என்னும் இரண்டு வார காலப் பயிற்சிகள் **4** அணிகளாக **12.11.2018** முதல் **07.01.2019** வரை நடத்தப்பட்டன.










துறைக்கென ஒரு செயல் திட்டத்தினை உருவாக்கும் பொருட்டு ஒரு சிறப்பு கருத்துப் பரிமாற்றக் கூட்டம் **08.01.2019** முதல் **10.01.2019** வரை தமிழ் இணையக் கழக கலையரங்கத்தில் நடத்தப்பட்டது



உலக மரபு வார விழா கொண்டாட்டங்கள் (19.11.2018 முதல் 25.11.2018 வரை) – களிமண் மாதிரி மற்றும் ஓவியப் போட்டிகள் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்பட்டன



கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் திறன்மிகு வகுப்பறை (Smart Classroom) ஏற்படுத்தப்பட்டுள்ளது